# 10. நிதியியல் துறை

## 10.1. பண நிரம்பல்

தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் கணிசமாக விரிவடைந்தமையின் முதன்மைக் காரணத்தினால் நாணய விரிவாக்கம் தொடர்ந்தும் மிக உயர்வாக விளங்கியது. இது, உள்நாட்டு மூலதனச் சந்தையைப் பாதித்த வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலில் ஏற்பட்ட மிகக் கடுமையான குறைப்பின் பின்னணியில் ஏற்பட்டுள்ளது. அதேவேளை அரசும் அரச கூட்டுத்தாபனங்களும் வங்கிக் கொடுகடனை அதிகளவில் நாடின. இதன் விளைவாக, விரிந்த பண நிரம்பல் (M2) நியதிகளில் அளவிடப்பட்டவாறான பண நிரம்பல் 1995 இல் 19.2 சதவீதத்தினால் விரிவடைந்தது. முன்னைய ஆண்டின் 19.7 சதவீதத்துடனும் முன்னைய ஆண்டுகளின் உயர்ந்த வளர்ச்சி வீதப் பின்னணியிலும் நோக்குகையில் இது நாணய வளர்ச்சியின் உயர்ந்த வீதமாகக் கருதப்படுகின்றது. எனினும், குறுகிய பண நிரம்பல் (M1) முன்னைய ஆண்டின் 18.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 இல் 6.7 சதவீதத்தினால் மட்டும் வளர்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். M1இலும் பார்க்க M2 இல் விரைவான வளர்ச்சி ஏற்பட்டமைக்கு, உயர்ந்த வட்டிவீதங்களின்போது பொதுமக்களின் விருப்புரிமை வட்டி உழைக்கும் சொத்துக்களுக்கு மாற்றமடைந்தமையே காரணமாகும். அத்துடன், தன்னியக்கக் கூற்று அட்டை வசதிகள் போன்ற புதிய நிதியியல் கருவிகள் கொடுகடன் அட்டைகளின் பிரபல்யம் வளர்ந்து செல்கின்றமை, வர்த்தக வங்கிகளினால் வைப்புத் திரட்டல் முயற்சிகள் செறிவாக்கப்பட்டு வருகின்றமை என்பனவும் இம் முன்னேற்றத்திற்கு உதவின. அத்துடன் வட்டிவீதங்களை உயர்த்துவது தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கி தாமதம் காட்டியமையின் காரணமாக புதிய வைப்புக்களில் மெதுவான வளர்ச்சி ஏற்பட்டமையும் பொதுமக்களின் முதலீடுகள் வீழ்ச்சியடைந்த பங்குச் சந்தையிலிருந்து வங்கித் தொழில் முறைக்கு மாற்றமடைந்தமையும் இத்தன்மைக்கு உதவின.

**அட்டவணை 10.1**

**நாணயப்புள்ளி விபரங்களின் தொகுப்பு**

| விடயம் | 1995 முடிவில் (ரூ.பில்) | மாற்றம் 1994 தொகை (ரூ.பில்) | மாற்றம் 1994 % | மாற்றம் 1995 தொகை (ரூ.பில்) | மாற்றம் 1995 % |
|---|---|---|---|---|---|
| நாணயக்கூட்டுக்கள் | | | | | |
| குறுகிய பணநிரம்பல் ($M_1$) | 75.2 | 11.1 | 18.7 | 4.8 | 6.7 |
| விரிந்த பணநிரம்பல் ($M_2$) | 228.5 | 31.5 | 19.7 | 36.9 | 19.2 |
| ஏதுக்காரணிகள் | | | | | |
| உள்நாட்டுக்கொடுகடன் | 223.8 | 23.1 | 15.3 | 50.0 | 28.8 |
| அரசுக்கு (தேறிய) | 35.2 | 1.2 | 4.3 | 7.1 | 25.1 |
| அரச கூட்டுத்தானங்கள் | 8.5 | -2.6 | -33.6 | 3.3 | 65.2 |
| தனியார்துறை | 180.1 | 21.9 | 17.7 | 42.9 | 29.5 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) | 66.5 | 16.3 | 34.0 | 2.0 | 3.2 |
| ஏனைய விடயங்கள்(தேறிய) | -61.8 | -7.9 | 20.5 | -15.2 | 32.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஒதுக்குகளைச் சிக்கனப்படுத்தியமை, பெரும் போட்டித் தன்மை மிக்க வங்கித்தொழில் சூழ்நிலையில் புதிய வைப்புக்களைத் திரட்டுவதற்கு வலுவான வங்கித் தொழில் பிரயோகங்களை மேற்கொண்டமை, மற்றும் வெளிநாட்டிலுள்ள நிலுவைகளை குறைத்தமை என்பனவற்றினூடாக தனியார்துறை மற்றும் அரசதுறை ஆகிய இரண்டினதும் அதிகரித்த கொடுகடன் கேள்வியினை வங்கிகள் வழங்கியதன் காரணமாக வங்கித் தொழில் முறையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 27 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்தன. வட்டி வீதங்கள் உயர்வாக அதிகரித்துச் சென்றபோதும் தனியார் துறையின் கொடுகடனுக்கான கேள்வி உயர்வாகக் காணப்பட்டமைக்கு வெளிநாட்டி லிருந்தான மூலதன உட்பாய்ச்சல் குறைவடைந்தமை, வீழ்ச்சியடைந்த பங்குச் சந்தை ஊடாக கிடைக்கத்தக்கதாகவிருந்த நிதியங்கள் குறைவடைந்தமை, வழமையான மொத்த விற்பனையைவிட குறைவான விற்பனையின் விளைவாக ஆண்டின் இறுதிப் பகுதியில் வியாபார தொழில் முயற்சிகள் திரவப் பிரச்சினைகளை எதிர்நோக்கியமை என்பன காரணங்களாக விளங்கின. இதன்படி, 1994 இன் ரூ. 219,430 இலட்சத்துடன் (17.7 சதவீதம்) ஒப்பிடுகையில் 1995 இல் தனியார்துறைக்கான கொடுகடன் ரூ. 429,370 இலட்சத்தினால் (29.5 சதவீதம்) உயர்வடைந்தது. இவ்விரிவாக்கமானது பாதுகாப்பு மற்றும் உதவிக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் மீதான உயர்ந்த செலவுகளின் விளைவாக ஏற்பட்ட அதிகரித்த இறைப் பற்றாக்குறைகளின் காரணமாக 1995 இன் இறுதிப் பகுதியில் அதிகரித்த அரசின் வங்கிக் கடன்பாடுகளினால் மேலும் வலுவூட்டப்பட்டது. அரசும் முன்னைய ஆண்டின் ரூ. 11,540 இலட்சத்திற்கெதிராக 1995 இல் ரூ. 70,670

## அட்டவணை 10.2

## நாணயக்கூட்டுக்கள் 1993 - 1995

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சதவீத மாற்றம் | | | | | | சதவீத மாற்றம் | | |
| | 1993 | 1994 | 1995 | 1993 | 1994 | 1995 | 1993 | 1994 | 1995 | 1993 | 1994 | 1995 |
| சனவரி | 51,195 | 57,772 | 69,875 | 15.5 | 12.8 | 20.9 | 132,393 | 159,015 | 193,010 | 19.6 | 20.1 | 21.4 |
| பெப்புருவரி | 51,148 | 62,351 | 70,702 | 11.8 | 21.9 | 13.4 | 134,235 | 163,175 | 192,859 | 19.4 | 21.6 | 18.2 |
| மாச்சு | 53,444 | 62,708 | 71,335 | 11.6 | 17.3 | 13.8 | 138,994 | 165,703 | 195,370 | 20.8 | 19.2 | 17.9 |
| ஏப்பிறல் | 53,528 | 61,611 | 68,718 | 11.3 | 15.1 | 11.5 | 141,079 | 166,336 | 195,982 | 20.2 | 17.9 | 17.8 |
| மே | 52,573 | 60,856 | 68,376 | 12.1 | 15.8 | 12.4 | 139,761 | 166,380 | 197,892 | 19.4 | 19.0 | 18.9 |
| யூன் | 51,992 | 62,417 | 68,714 | 11.6 | 20.1 | 10.1 | 138,412 | 171,035 | 201,170 | 19.0 | 23.6 | 17.6 |
| யூலை | 52,976 | 63,275 | 68,194 | 15.5 | 19.4 | 7.8 | 140,920 | 172,890 | 202,826 | 21.3 | 22.7 | 17.3 |
| ஓகத்து | 53,524 | 63,571 | 69,321 | 15.6 | 18.8 | 9.0 | 142,007 | 173,931 | 205,325 | 20.1 | 22.5 | 18.0 |
| செத்தெம்பர் | 54,640 | 66,119 | 70,306 | 16.5 | 21.0 | 6.3 | 145,299 | 178,121 | 211,009 | 21.6 | 22.6 | 18.5 |
| ஒற்றோபர் | 55,159 | 66,873 | 71,538 | 18.9 | 21.2 | 7.0 | 148,535 | 183,127 | 215,349 | 21.7 | 23.3 | 17.6 |
| நவெம்பர் | 55,296 | 66,693 | 71,847 | 18.1 | 20.6 | 7.7 | 152,863 | 184,359 | 218,999 | 22.9 | 20.6 | 18.8 |
| திசெம்பர் | 59,355 | 70,461 | 75,217 | 18.6 | 18.7 | 6.7 | 160,136 | 191,670 | 228,536 | 23.4 | 19.7 | 19.2 |
| மாதாந்தச் சராசரி | 53,736 | 63,726 | 70,345 | 14.8 | 18.6 | 10.4 | 142,886 | 172,979 | 204,861 | 20.8 | 21.1 | 18.4 |

குறிப்பு : பன்னாட்டு நடைமுறை நியமங்களுடன் ஒத்திருக்கும் விதத்தில் 1990 இலிருந்தான நாணயத் தரவுகள் மீள பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. தயவு செய்து புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணைகள் 80, 81, 85 இனைப் பார்க்கவும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 10.3

### நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும் 1993 - 1995

(பத்து இலட்சம் ரூபாய்களில்)


| விடயம் | 1993 திசெம்பர் | 1994 திசெம்பர் | 1995 திசெம்பர் | மாற்றம் 1994 தொகை | மாற்றம் 1994 சதவீதம் | மாற்றம் 1995 தொகை | மாற்றம் 1995 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 32,133 | 38,906 | 42,198 | 6,773 | 21.1 | 3,292 | 8.5 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 27,222 | 31,555 | 33,019 | 4,333 | 15.9 | 1,464 | 4.6 |
| குறுகிய பண நிரம்பல் ($M_1$) | 59,355 | 70,461 | 75,217 | 11,106 | 18.7 | 4,756 | 6.7 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 100,781 | 121,209 | 153,319 | 20,428 | 20.3 | 32,110 | 26.5 |
| கூட்டுறவு நிறுவனங்கள் | 3,287 | 3,781 | 3,598 | 494 | 15.0 | -183 | -4.8 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 10,287 | 13,236 | 15,888 | 2,949 | 28.7 | 2,652 | 20.0 |
| ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) | 87,207 | 104,192 | 133,833 | 16,985 | 19.5 | 29,641 | 28.4 |
| **விரிந்த பண நிரம்பல் ($M_2$)** | 160,136 | 191,670 | 228,536 | 31,534 | 19.7 | 36,866 | 19.2 |
| **ஏதுக் காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் | 150,697 | 173,794 | 223,798 | 23,097 | 15.3 | 50,004 | 28.8 |
| அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் | 26,993 | 28,147 | 35,214 | 1,154 | 4.3 | 7,067 | 25.1 |
| அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 35,098 | 40,250 | 47,738 | 5,152 | 14.7 | 7,488 | 18.6 |
| மத்திய வங்கியால் | 16,797 | 19,568 | 27,458 | 2,771 | 16.5 | 7,890 | 40.3 |
| வர்த்தக வங்கிகளால் | 18,301 | 20,682 | 20,280 | 2,381 | 13.0 | -402 | -1.9 |
| அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் | 8,105 | 12,103 | 12,524 | 3,998 | 49.3 | 421 | 3.5 |
| தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 123,704 | 145,647 | 188,584 | 21,943 | 17.7 | 42,937 | 29.5 |
| கூட்டுறவு நிறுவனங்கள் | 1,903 | 2,541 | 3,939 | 638 | 33.5 | 1,398 | 55.0 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 7,775 | 5,163 | 8,527 | -2,612 | -33.6 | 3,364 | 65.2 |
| ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் | 114,026 | 137,943 | 176,118 | 23,917 | 21.0 | 38,175 | 27.7 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) | 48,119 | 64,467 | 66,532 | 16,348 | 34.0 | 2,065 | 3.2 |
| மத்திய வங்கி (தேறிய) | 52,980 | 65,864 | 74,301 | 12,884 | 24.3 | 8,437 | 12.8 |
| வர்த்தக வங்கிகள் (தேறிய) | -4,861 | -1,397 | -7,769 | 3,464 | 71.3 | -6,372 | -456.1 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) | -38,679 | -46,590 | -61,794 | -7,911 | -20.5 | -15,204 | -32.6 |
| மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -31,975 | -39,398 | -51,986 | -7,423 | -23.2 | -12,588 | -32.0 |
| வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -6,704 | -7,192 | -9,808 | -488 | -7.3 | -2,616 | -36.4 |
| **விரிந்த பண நிரம்பல் ($M_2$)** | 160,136 | 191,670 | 228,536 | 31,534 | 19.7 | 36,866 | 19.2 |

குறிப்பு : (அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.
அடையாளங்கள் $M_2$ இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
பன்னாட்டு நடைமுறை நியமங்களுடன் ஒத்திருக்கும் வீதத்தில் நாணயத்தரவுகள் மீன பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.
தயவு செய்து புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணைகள் 82, 83, 87 இனைப்பார்க்கவும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 10.1

நாணயக்கூட்டுக்கள், சுற்றோட்ட வேகம், பணப்பெருக்கி




இலட்சத்தினைக் கடனாகப் பெற்றுக் கொண்டதன் மூலம் இக்கொடுகடன் விரிவாக்கத்திற்கு உதவியது

1995 இன் முதற் பகுதியில் அரசின் காசுப் பாய்ச்சலில் பாரிய சமமின்மை காணப்பட்டமையினால் வங்கித்தொழில் துறையிலிருந்து அரசுக்கான கொடுகடனின் வளர்ச்சி முழுமையாகவே 1995 பின் பின்னரைப் பகுதியிலேயே ஏற்பட்டது. உள்நாட்டு நிதியியல் மூலங்களின் மீது அரசின் கோரிக்கைகள் பெருமளவில் காணப்பட்ட ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உயர்ந்துசெல்லும் பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் செலவுகளில் பாதகமான நாணயச் சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன. எனினும் தனியார்துறைக்கான கடன் வழங்கலானது வர்த்தக வங்கிகளுக்கு கவர்ச்சிகரமாகக் காணப்பட்டமையின் காரணமாக அரசிற்கான அவற்றின் கொடுகடன் 1995 இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, அரசுக்கான மத்திய வங்கியின் தேறிய கொடுகடன் வழங்கல் ரூ. 76,620 இலட்சத்தினால் உயர்வடைந்தது. இது நிகழ்ந்திராவிடில் சந்தையின் வட்டிவீதங்கள் அதிகளவிற்கு உயர்ந்திருக்கும்.

1995 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன், முன்னைய இரு ஆண்டுகளினதும் காணப்பட்ட பெருமளவு வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 33,640 இலட்சத்தினால் (65.2 சதவீதம்) குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்க் களஞ்சிய வசதிகள் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து (ரூ. 12,970 இலட்சம்) அதன் கடன்பாடுகளும்

முன்னெப்பொழுதுமில்லாத வகையில் உயர்வடைந்தமை, உலகின் கோதுமை விலைகள் (ரூ. 6,440 இலட்சம்) உயர்வடைந்தமையின் காரணமாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் கடன்பாடுகள் உயர்வடைந்தமை ஆகியவற்றை இது பிரதிபலித்தது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான மொத்த வங்கிக் கொடுகடன் 1994இன் ரூ. 6,380 இலட்சத்திற்கெதிராக 1995 இல் ரூ. 13,980 இலட்சத்தினால் அதிகரித்தமைக்கு ஆண்டின் அதிஉயர் அறுவடைகாரணமாக நெற் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவுகள் (ரூ. 14,580 இலட்சம்) அதிகரித்தமையினால் அதற்கான கொடுகடன் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

சென்மதி நிலுவையில் காணப்பட்ட பெருமளவு திரண்ட நிலுவைகளின் காரணமாக பாரிய விரிவுத் தாக்கத்தினைக் கொண்டிருந்த கடந்த நான்கு ஆண்டுகளைப் போலன்றி, 1995 இல் வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1995 இல் 3.2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை மட்டுமே பிரதிபலித்தன. 1995 இல் சென்மதி நிலுவையில் திரண்ட பற்றாக்குறை காணப்பட்டமையினால், அவ்வதிகரிப்பு முழுவதும் செலாவணி வீதங்கள் தேய்வடைந்தமையின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 63,720 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1994 இன் ரூ. 128, 840 இலட்சம் அல்லது 24.3 சதவீதம் அதிகரிப்பினைத் தொடர்ந்து 1995 இல் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 84,370 இலட்சத்தினால் (12.8 சதவீதம்) அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வெளிநாட்டுச் சொத்துக்களில் நேரிணையான அதிகரிப்பு இன்றி, வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் வடிவிலான வெளிநாட்டுப் பொறுப்புக்களின் திரண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கும், உள்நாட்டு நிதியியல் சொத்துக்களுக்குமிடையிலான வட்டிவீத வேறுபாடுகள் விரிவடைகின்றனதன் காரணமாக வங்கிகள் அவற்றின் சொத்துப் பட்டியல்களை கவர்ச்சி குறைந்த வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து கவர்ச்சி நிறைந்த உள்நாட்டுச் சொத்துக்களுக்கு மாற்றி கொண்டதனால் வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 19,020 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் வைப்புக்களிலும் வங்கிகளின் வெளிநாட்டு நிலுவைகளிலும் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலித்தன. அதேவேளை, வதிவற்றோர் வெளிநாட்டு நாணய, வதிவோர் வெளிநாட்டு நாணயம் மற்றும், வதியும் இலங்கை யரல்லதோரின் வெளிநாட்டு நாணய வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 44,070 இலட்சத்தினால் (14.5 சதவீதம்) உயர்வடைந்தன.

1995 இல் ஒதுக்குப் பணம் (உயர்வலு நாணயம் அல்லது நாணயத் தளம்) 1994 இன் ரூ. 115,870 இலட்சம் அல்லது 20.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 105,320 இலட்சம் அல்லது 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மூலப்பக்கத்திலிருந்து நோக்குகையில், அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கமானது ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சிக்கு உதவியது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம், வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் ஆகிய இரண்டினதும் அதிகரிப்பில் இது பிரதிபலித்தது. ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியில் பெரும்பாலும் அறுபது சதவீதமானது திசெம்பரில் ஏற்பட்டதுடன் இம்மாதகாலத்தில் அரசினால் பெருமளவு கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையை இது பிரதிபலிப்பதாக இருந்தது.

### 10.2. நாணயக் கொள்கை

1995இல் நாணயக் கொள்கையை வகுப்பதற்கு மத்திய வங்கி கேட்டுக்கொள்ளப்பட்ட சூழ்நிலை கடந்த ஐந்தாண்டுகளில் நிலவிய சூழ்நிலையிலிருந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு வேறுபட்டிருந்தது. கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் நாணய வளர்ச்சியானது பெருமளவு மூலதன உட்பாய்ச்சலினால் உருவாக்கிய தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் மிகக் கூடியளவு விரிவாக்கத்தின் மூலம் முக்கியமாக வலுவூட்டப்பட்டது. எனினும் இத்தாக்கம் 1995 இல் காணப்படவில்லை. எனவே, நாணயத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தனியார் துறைக்கும் அதேபோன்று அரசிற்குமான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக இருந்தது. ஆகவே, 1995இல் நாணயக் கொள்கையை வடிவமைப்பதில் மத்திய வங்கி எதிர்நோக்கிய முக்கிய சவால் யாதெனில் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் நாணயத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய உயர் அளவினை விஞ்சிய மட்ட வளர்ச்சியின் தீய விளைவுகளைத் தவிர்த்துக்கொள்ளுவதுடன் பொருளாதார நடவடிக்கைகளுக்கான தடைகளை அகற்றுவதற்கு போதுமான திரவத் தன்மையைக் கொண்டிருக்கக்கூடிய முறையொன்றினை

உறுதிப்படுத்துவதாக இருந்தது. எனவே முன்னைய ஆண்டுகளில் மூலதன உட்பாய்ச்சல்களினால் ஏற்பட்ட விரிவுத்தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையை 1995 இலும் தொடரவேண்டியிருந்தது. 15 சதவீதமான உயர்ந்த நியதி ஒதுக்கு விகிதம் ஆண்டு முழுவதும் பேணப்பட்டது. எனினும், ஆண்டின் பின்னரைப் பகுதியில் மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ததன்மூலம் இறுக்கமான நாணயக் கொள்கையை ஓரளவுக்குத் தளர்த்தியதுடன் இறுக்கமான திரவ நிலைமை மற்றும் உயர்ந்த வட்டிவீதங்களினால் உற்பத்தித்திறன் கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் தகாத முறையில் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக நிதியியல் நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வெளிநாட்டுக் கடன்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அனுமதித்தது.

நாணயக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதில் வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை முதன்மைக் கருவியாகப் பயன்படுத்தியதுடன் அதன் பொருட்டு தனது திறைசேரி உண்டியல் பட்டியலையும் தனது சொந்தப் பிணையங்களையும் பயன்படுத்தியது. வங்கி முறையிலுள்ள மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக்கொண்டதன் விளைவாக, மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1994 இறுதியின் ரூ. 50,990 இலட்சத்திலிருந்து 1995 மாச்சு இறுதியில் ரூ. 29,910 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் நாணய வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி அதன் 3 மாத சொந்தப் பிணைகளை வெளியிட்டது. அவற்றின் மீதான சராசரி விளைவு ஆண்டிற்கு 14.08 - 18.10 சதவீத வீச்சில் காணப்பட்டது.

பண நிரம்பலில் உயர்ந்த வளர்ச்சி காணப்பட்டபோதும் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலில் காணப்பட்ட மெதுவான தன்மையும், நிதிக்கான உள்நாட்டுக் கேள்வி அதிகரித்தமையும், திரவ நிதியங்களின் பற்றாக்குறைக்கு இட்டுச்சென்றதுடன் ஆண்டின் இறுதியில் வட்டிவீதங்கள் நேரிணையாக உயர்வடைவதற்கும் வழியமைத்தன. ஏப்பிறலில் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டமையினதும் கோதுமை விலைகள் உயர்வடைந்தமையினதும் விளைவாக பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் செலவுகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்வாக இருந்தமையின் காரணமாக அரசின் கொடுகடனுக்கான கேள்வி அதிகரித்தது. வெளிநாட்டிலிருந்தான உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமை, மந்தமான பங்குச் சந்தையில் நிதிகளைப் பெறமுடியாமல்போனமை, பணவீக்க எதிர்பார்ப்புக்கள், கூட்டுறவுத் துறையின் காசுப் பாய்ச்சலில் காணப்பட்ட பிரச்சினைகள் ஆகிய அனைத்தும் வங்கிக் கொடுகடனுக்கான தனியார் துறையினது கேள்வி உயர்வடைய காரணமாயின. திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் மாச்சின் 14.34 சதவீதத்திலிருந்து திசெம்பரில் 18.68 சதவீதத்திற்கு உயர்வடைவதற்கு இக்காரணிகள் வழிவகுத்தன. அதேவேளை, அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் மாச்சின் 18 - 25 சதவீதத்திலிருந்து திசெம்பரில் 28 - 58 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. அத்துடன், ஊக நடத்தையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பணச்சந்தையினது நாளாந்த வீதங்களின் அசைவுகளில் வழமைக்கு மாறான அடிக்கடி மாறும் தன்மை காணப்பட்டது.

நாணயச் சந்தையில் காணப்பட்ட இறுக்கமான தன்மையை விடுவிப்பதற்காக, இரண்டாந்தரச் சந்தையின் திறைசேரி உண்டியல் கொள்வனவுகளில் மத்திய வங்கி தலையிட்டதுடன் முதிர்ச்சியின்போது தனது சொந்தப் பிணைகளை மீள வெளியிடாதிருக்கவும் தீர்மானித்தது. மேலும், நவெம்பரில் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியையும் வங்கி தொடங்கியது. அழைப்புப் பணச் சந்தையின் ஊக நடவடிக்கையை தளர்வுறச் செய்யும் என எதிர்பார்க்கப்படும் இவ்வசதி ஓர் இரவு அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டதாகும். அத்துடன், மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் விற்பனைகளின்மீது விதிக்கப்பட்ட மீள் கழிவு வீதத்தினையும் வங்கி குறைத்தது. மேலும், 1996 இன் தொடக்கத்திலிருந்து செயற்படும் வகையில் வர்த்தக வங்கிகள் அவற்றின் மூலதனம் மற்றும் ஒதுக்குகளில் 5 சதவீதம் வரையில் வெளிநாட்டிலிருந்து கடன்பட்டுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதுபற்றி திசெம்பர் இறுதியில் மத்திய வங்கி அறிவித்தது. இவ் வழிமுறையானது சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்குத் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை தாராளமயப்படுத்தும் தற்போதைய செயல்முறையின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றது. வர்த்தக வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களது ஊகநோக்கங்களுக்காக கடன் வழங்குவதிலிருந்தும் அவற்றை ஊக்கம் குன்றச் செய்வதற்கு நன்னடத்தை ஊக்குவிப்பையும் வங்கி பயன்படுத்தியுள்ளது. இத்தொழிற்பாடுகளின் விளைவாக பணச் சந்தையில் உறுதித்தன்மை மீள நிறுவப்பட்டது. அதேவேளையில் அதிகரிக்கப்பட்ட

திரவத்தன்மையானது மிக உயர்ந்த மட்டங்களிலிருந்து வட்டிவீதங்கள் மீதமடைய வழிவகுத்தது.

எனினும் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி ஆண்டு முழுவதும் நியதி ஒதுக்கு விகிதத்தினை சார்பு ரீதியில் உயர்ந்த வீதமான 15 சதவீதத்தில் தொடர்ந்தும் பேணியது. அவ்வாறிருந்தபோதும் வெளிநாட்டில் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு விகிதம் தொடர்ந்தும் 5 சதவீதமான சலுகை வீதத்தைக் கவர்ந்தது. இடருக்குள்ளான நிதிக் கூட்டு நிலையங்களிலிருந்து நிதிக்காக எழுந்த கோரல்கள் ஒவ்வொன்றாக தொடர்ந்தும் வழங்கப் பட்டபோதும் மத்திய வங்கி நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழ் கடன் வழங்கலிருந்தும் தன்னைத் தவிர்த்துக் கொண்டது. இதன் விளைவாக நடுத்தர, நீண்டகால கடன் நிதியத்தின் கீழ் இடருக்குள்ளான நிதிக் கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வசதிகளின் வெளிநின்றமட்டம் 1994 இறுதியின் ரூ. 23,040 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 24,370 இலட்சத்திற்கு அதிகரித்தது. மேலதிக - சந்தைக்கு வெளியேயான திட்டங்களின் ஊடாக கொடுகடன் வழங்கலை ஆகக் குறைந்ததாக்கும் நடைமுறைக் கொள்கைகளைப் பேணும் வீதத்தில் கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகளிலிருந்து தேறிய குறுங்கால வசதிகள் மற்றும் நடுத்தரகால, நீண்டகால கொடுகடன் நிதியம் ஆகிய இரண்டின் கீழும் மொத்த வெளிநின்ற மீள்நிதியிடல் 1994 இறுதியின் ரூ. 33,760 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 28,000 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டது.

## 10.3. வட்டி வீதங்கள்

1995இன் முற்பகுதியில் குறுங்கால வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்து, மத்திய வங்கிப் பிணைகள் மீள வழங்கப்படாமையின் முதன்மைக் காரணத்தினால் திரவத்தன்மை குறிப்பிடத் தக்களவிற்கு இலகுபடுத்தப் பட்டமையையும் அரசிற்கான தற்காலிக முற்பணங்களின் அதிகரிப்பையும் அரசிற்கு மாற்றல் செய்யப்பட்ட மத்திய வங்கி இலாபங்களையும் பிரதிபலித்தது. வெளிநாட்டு உட்பாய்ச்சல் குறைவடைந்தமையின் காரணமாக திரவநிலைமை கட்டுப்படுத்தப் பட்டமை அரசின் கடன்பாடுகளின் அதிகரிப்பு, தனியார் துறையினரால் தொடர்ந்தும் வங்கிக்கடன் பயன்படுத்தப்பட்டமை ஆகிய காரணங்களினால் ஆண்டின் இரண்டாம் காற்பகுதியிலிருந்து இந்த நிலைமை கடுமையாக மாற்றமடைந்தது. 1994 இறுதியின் 19.43 சதவீதத்திலிருந்து 1995 பெப்புருவரியில் 14.00 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த 12 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவு வீதம் ஒற்றோபர் நடுப்பகுதியில் 20.5 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்திற்கு படிப்படியாக உயர்வடைந்தது. அதன் பின்னர் இவ்வீதங்கள் 1995 இறுதிவரை சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. எனினும் 18 சதவீதத்திற்கு மேலேயே இருந்தன. அழைப்புப் பணச் சந்தை வீதங்களும் 1995 இன் பின்னரைப்பகுதியில் காணப்பட்ட உயர்ந்தளவு மாறுபாடுகளுடன் இதே போக்கினைக் கொண்டிருந்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் நடுத்தர, நீண்டகால வீதங்களும் சில தளம்பல்களைப் பதிவு செய்தன.

### குறுங்கால வட்டிவீதங்கள்

திரவத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக, குறுங்கால வட்டிவீதங்கள் 1995 இன் முதலிரண்டு மாதங்களில் வீழ்ச்சிப் போக்கினைப் பிரதிபலித்தன. திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் மாச்சில் ஓரளவு உறுதியாக இருந்தன. ஏப்பிறலுக்குப் பின்னர், சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காரணமாக திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் உறுதியாக மேல்நோக்கி அசைந்தன. அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் 1995 இன் பின்னரைப் பகுதியில் சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பரந்தளவு தளம்பல்களுடன் இதே போக்கினைக் காட்டின. ஆண்டின் இறுதிக் காலாண்டில் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் பெருமளவு அடிக்கடி மாறும் தன்மைகளுடன் மிக உயர்ந்த மட்டங்களுக்கு உயர்வடைந்தன. அபிவிருத்தி வங்கிகள், மற்றும் வணிக வங்கிகள் போன்ற வர்த்தக வங்கிகளல்லா பங்கேற்பாளர்களிடம் நிதிக்கான கேள்வி அதிகரித்தமை, அரசிற்குக் காணப்பட்ட காசுப் பாய்ச்சல் பிரச்சினைகளின் காரணமாக அரச வங்கிகளில் குறுங்கால நிதிகளில் ஏற்பட்ட பற்றாக்குறை என்பன இக்காலப்பகுதியில் வட்டி வீதங்கள் அதிகளவில் அதிகரிப்பதற்கு முக்கிய பொறுப்பாக இருந்தன. அழைப்புப் பணச் சந்தை வீதங்களை உறுதிப்படுத்தும் நோக்குடன் 1995 நவெம்பரில் மத்திய வங்கி அறிமுகப்படுத்திய திறைசேரி உண்டியல்களில் நேர்மாற்று மீள்கொள்வனவுத் திட்டங்களின்கீழ் தகைமைபெற்ற கடன்பாட்டாளர்களுக்கு குறுங்கால நிதிகள் வழங்கப்பட்டன. இத்திட்டம் திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களாக இருந்த வர்த்தக வங்கிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, வழங்கப்பட்ட தொகையானது குறுங்கால திரவத்தன்மைக்கான அதிகரித்த கேள்வியுடன் ஒப்பிடுகையில் சார்புரீதியில்

வரைபடம் 10.2
வட்டி வீதங்கள்




சிறிதாக இருந்தமை, சந்தைக் குறைபாடு என்பனவற்றின் காரணமாக இத்திட்டமானது குறுங்கால வட்டிவீதங்களின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் மட்டுப்படுத்தலைக் கொண்டிருந்தது.

திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவு வீதங்கள் 1994 திசெம்பர் இறுதியின் 18.75 - 19.43 சதவீதத்திலிருந்து பெப்புருவரி முதலாம்வாரத்தில் 13.24 - 14.00 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்து வழமையான பருவகாலத் தன்மையைப் பிரதிபலித்தன. இக்காலப்பகுதியில் திறைசேரி உண்டியல் முதலாந்தர ஏலங்கள் பெருமளவிற்கு மேலதிக உதவு தொகைகளைக் கொண்டிருந்தன. மேலதிக திரவநிலையை அகற்றுவதற்காக மத்திய வங்கி தொடர்ந்தும் அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டது. இதன்படி, மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1994 இறுதியின் ரூ. 50,930 இலட்சத்திலிருந்து 1995 பெப்புருவரி நடுப்பகுதியில் ரூ. 4,920 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக 1995 ஏப்பிறலிலிருந்து மேல்நோக்கிய போக்கினைக் கொண்டிருந்த திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் யூன் இறுதியில் 16.36 - 16.47 சதவீத வீச்சினை அடைந்தன. 1994 இறுதியின் 20.00 - 23.00 சதவீத வீச்சிற்கிடையிலிருந்து சனவரி மூன்றாம் வாரத்தில் 6.00 - 14.00 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்த அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் யூன் இறுதியளவில் 23.00 - 34.00 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. மாச்சிற்கும் மேயிக்குமிடையிலான காலப்பகுதியில் குறைவடைந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் குறைப்பு அரசின் காசு நிலுவைகள் நலிவுற்றமை, மத்திய வங்கி அதன்

சொந்தப் பிணைகளின் வழங்கல்களூடாக ரூ. 16,700 இலட்சமளவில் திரவத்தன்மையை ஈர்த்துக் கொண்டமை போன்ற பல நடவடிக்கைகள் சந்தையின் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைக்குப் பொறுப்பாக இருந்தன.

1995 இன் முதலரைப் பகுதியில் பணச் சந்தையில் ஏனைய குறுங்கால வீதங்களில் காணப்பட்ட பொதுவான போக்கினைத் தொடர்ந்து, இரண்டாந்தர சந்தையில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் விற்பனைகள் (கழிவிடல்) மற்றும் கொள்வனவுகள் (மீள் கழிவிடல்) மீதான விளைவு வீதங்கள் தளம்பலுற்றன. 18.48 சதவீதமாக விளங்கிய 3 மாத திறைசேரி உண்டியல்களினதும் 19.18 சதவீதமாக விளங்கிய 12 மாத திறைசேரி உண்டியல்களினதும் கழிவு வீதங்கள் பெப்புருவரி முதல்வாரத்தில் முறையே 12.99 சதவீதத்திற்கும் 13.75 சதவீதத்திற்கும் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் அதன் பின்னர் சந்தையின் போக்குகளுக்கு இசைவாக 1995 யூன் இறுதியளவில் முறையே 15.53 சதவீதத்தினையும் 15.84 சதவீதத்தினையும் அடைந்தன. இதே போக்கினைப் பின்பற்றி மீள் கழிவிடல் வீதங்களுக்கும் சீராக்கம் செய்யப்பட்டன.

மீள் கொள்வனவு வீதம் 1994 இறுதியின் 20 சதவீதத்திலிருந்து 1995 மாச்சு மூன்றாம் வாரத்தில் 12.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. பின்னர் இவ்வீதம் மேயில் 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1995 யூன் இறுதியில் 13.5 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, திரவத் தன்மைக் கட்டுப்பாட்டின் காரணமாக, ஆண்டின் பின்னரைப் பகுதியில் குறுங்கால வட்டிவீதங்களில் மிகக் கூடியளவு மேல்நோக்கிய அசைவினைக் காட்டின. முதலாந்தர ஏலங்களில் 12 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு வீதங்கள் யூன் ,இறுதியின் 16.47 சதவீதத்திலிருந்து ஒற்றோபரில் 20.54 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்திற்கு உயர்வடைந்தன. அதன் பின்னர் திறைசேரி உண்டியல் உடைமைகள் ஒற்றோபர் இறுதியின் ரூ. 9.1 பில்லியனிலிருந்து திசெம்பர் இறுதியில் ரூ. 12.5 பில்லியனுக்கு அதிகரித்தமையின் மூலம் தெளிவாக்கப்பட்டவாறு மத்திய வங்கியினால் நிதியங்கள் உட்புகுத்தப்பட்டமையின் காரணமாக, திறைசேரி உண்டியல் வீதங்கள் 1995 இன் இறுதிக் காலாண்டில் சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டின. 1995 நவெம்பரிலிருந்து 3 மாத, 6மாத உண்டியல்கள் மீதான சராசரி விளைவு வீதங்கள் 12 மாத உண்டியல்களின் மீதான சராசரி விளைவு வீதத்திலும் (அதாவது 18.68 சதவீதம்) பார்க்க உயர்வாக இருந்தமையானது வட்டி வீதங்களில் எதிர்காலத்தில் வட்டி வீதங்கள் வீழ்ச்சியுறும் சந்தைத் தோற்றப்பாட்டைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

அழைப்புச் பணச் சந்தை வீதங்கள் யூலையிலும் 1995 இறுதிக் காலாண்டிலும் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டங்களுக்கு உயர்வடைந்தன. இறுதிக் காலாண்டில், இரு அரச வங்கிகளாலும் அழைப்புப் பணச் சந்தைக்கு நிரம்பல் செய்யப்பட்ட நிதி குறைவடைந்தமைக்கு அரசின் கடப்பாடுகளின் தீர்ப்பனவுகளில் ஏற்பட்ட தாமதங்கள், வர்த்தக வங்கிகளல்லாத பங்கேற்பாளர்களினால் நிதியங்களுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வி, மற்றும் வணிக வங்கிகள் உட்பட ஏனைய நிதி நிறுவனங்கள் அழைப்புப் பணச் சந்தை நிதியங்களில் பெருமளவு தங்கியிருந்தமை போன்றன திரவத்தன்மையின் மீது தாக்கத்தினைக் கொண்டிருந்தன. திறைசேரி உண்டியல்களுக்கான முதலாந்தர, இரண்டாந்தர சந்தைகளில் மத்திய வங்கி அதன் நடவடிக்கைகளூடாகவும் நேர்மாற்று மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மூலமாகவும் நிதியங்களை அதிகரித்தபோதும் மேலே கூறிய காரணிகளின் தூண்டுதல்களினால் உந்தப்பட்டு அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் திசெம்பரில் 16.00 - 102 சதவீதங்களுக்கிடையில் தளம்பலுற்றன. நேர்மாற்று மீள் கொள்வனவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் தகைமை பெறாத நிறுவனங்களிடமிருந்து நிதிக்கான அதிகரித்த கேள்வி உருவாகும் வேளையில் அழைப்புப் பணச் சந்தை வீதங்களைக் கட்டுப்படுத்துவதில் இத்திட்டம் போதுமானளவு பயன் தருவதாக அமையவில்லை. அத்துடன், நிதியியல் முறையிலுள்ள அழைப்புரீதியான பலவீனங்களின் காரணமாக குறுங்கால வட்டி வீதங்களை நியாயமான மட்டங்களில் உறுதிப்படுத்துவதற்காக நேர்மாற்று மீள் கொள்வனவுத் திட்டத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் காணப்பட்டன. எனினும், திசெம்பர் நடுப்பகுதியில் திறைசேரி உண்டியல்களின் சிறப்பு வெளியீடு மற்றும் அரச வங்கிகளுக்கான அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளில் ஒரு பகுதியினைத் தீர்ப்பனவு செய்வதற்கு இயலச் செய்த கொழும்பு வாயுக் கம்பனியின் தனியார் மயமாக்கலின் பேரிலான பணப் பெறுகை என்பனவற்றின் பின்னர் சந்தையின் திரவத்தன்மை நிலைமை ஓரளவிற்கு முன்னேற்றம் கண்டது. திசெம்பர் இறுதியில், அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் 20.00 - 58.00 சதவீத வீச்சிற்கிடையில் காணப்பட்டன. வர்த்தக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் முக்கிய கடன்பாட்டாளர்களாக தொடர்ந்தும் காணப்பட்டமையும் திசெம்பரில்

பண்டிகைக் காலத்தின்போது ஏற்பட்ட கொடுகடனுக்கான உயர்ந்த கொடுக்கல் வாங்கல் கேள்வியும் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைவதனைத் தடுத்தன.

1995இன் பின்னரைப் பகுதியில், குறுங்கால வட்டிவீதங்களின் பொதுவான அசைவினைத் தொடர்ந்து திறைசேரி உண்டியல்களுக்கான சந்தையின் கழிவு வீதமும் மீள் கொள்வனவு வீதமும் மேல்நோக்கி அசைந்தன. மத்திய வங்கியின் சொத்துப் பட்டியலிருந்து திறைசேரி உண்டியல்களின் விற்பனையினை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டின் இறுதிக் காலாண்டில் இவ்வீதங்கள் கவர்ச்சிகரமான மட்டங்களுக்கு உயர்த்தப்பட்டன். இதன்படி, கழிவு வீதமும் மீள் கொள்வனவு வீதமும் 1995 திசெம்பர் இறுதியில் முறையே 19.01 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டன. அதேவேளை, நியாயமான வீதத்தில் சந்தைக்குத் திரவத் தன்மையை வழங்கும்பொருட்டு மீள் கழிவு வீதம் திசெம்பரில் சார்புரீதியில் தாழ்ந்த மட்டத்தில் (20.47 சதவீதம்) பேணப்பட்டது. நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் திசெம்பரில் 22.60 – 50.00 சதவீதத்திற்கு இடையில் வேறுபட்டமையானது சந்தையில் குறுங்கால நிதியங்களுக்கான பலத்த கேள்வியைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

1995 இல் முதல் பன்னிரண்டு வழங்கலுக்கு 13 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்த மத்திய வங்கிப் பிணைகள் மீதான நறுக்கு வீதம் ஓகத்திலும், செத்தெம்பரிலும் மேற்கொள்ளப்பட்ட இரு கடைசி வழங்கல்களுக்கும் 15.5 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. எனினும், இப்பிணைகள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 1995 மாச்சு 24ஆம் நாளன்று வழங்கப்பட்டவற்றின்மீது 14.08 சதவீதத்திலிருந்து 1995 யூன் 28இல் வழங்கப்பட்டவற்றிற்கு 16.60 சதவீதத்தற்கு உயர்வடைந்தது. அதன்பின்னர், இவ்வாண்டின் இறுதி வழங்கலான 1995 செத்தெம்பர் 6இல் வழங்கப்பட்டவற்றிற்கான விளைவு வீதம் சிறிய தளம்பல்களுடன் 18.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வழங்கல் வீதம் 1994 திசெம்பர் இறுதியின் 18.5 சதவீதத்திலிருந்து 1995 மார்ச்சு இறுதியில் 16.4 சதவீதத்திற்கு வீழ்ச்சிடைந்தமையானது ஏனைய குறுங்கால வட்டிவீதங்களின் பொதுவான போக்குகளை உறுதிப்படுத்துவதாகவுள்ளது. அதன் பின்னர் வீதம் 1995 யூன் இறுதியில் 20.0 சதவீதத்திற்கும் செத்தெம்பர் இறுதியில் மேலும் 20.5 சதவீதத்திற்கும் உயர்வடைந்தது. அதேவேளை வாராந்த நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 1994 திசெம்பர் இறுதியில் 18.5 சதவீதத்திலிருந்து 1995 யூன் இறுதியில் 16.9 சதவீதத்திற்கு உயர்வடையு முன்னர் 1995 மாச்சு இறுதியில் 16.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர் வாராந்த நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் தெளிவாக மேல்நோக்கி உயர்வடைந்து, 1995 இன் இறுதியில் 20.1 சதவீதத்தினை எய்தியது.

வட்டி வீதங்களின் அதிகரித்துச் செல்லும் போக்கினையும் வைப்புக்களின் வளர்ச்சி குறைவடைந்து வருவதனையும் கருத்திற் கொண்டு தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்புக்கள் மீதான வட்டிவீதங்களை இரு தடவை உயர்த்தியது. 1995 செத்தெம்பர் 1 ஆம் நாள் தொடக்கம் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 15 சதவீதத்திற்கும் திசெம்பர் 15 இலிருந்து 16 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டது. எனினும், அதனது சேமிப்பு வைப்பு வீதங்கள் ஆண்டு முழுவதும் 12 சதவீதத்தில் இருந்தன.

### நீண்ட கால வீதங்கள்

1995 இல் நீண்டகால வீதங்களில் சில தளம்பல்கள் அவதானிக்கப்பட்டன. 5 – 7 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணைகள் மீதான வட்டி வீதங்கள் 1994 அன் 3 – 5 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணைகள் மீதான 14 – 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதமாகக் காணப்பட்டன.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஆகக்குறைந்த கடன் வழங்கல் வீதம் 1994 இறுதியின் 18 சதவீதத்திலிருந்து 1995 சனவரியில் 17 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தேசிய சேமிப்பு வங்கியின் கடன் வழங்கல் வீதங்கள் 1994 இறுதியின் 18 – 21 சதவீத வீச்சிலிருந்து 1995 மேயில் 17 – 20 சதவீத வீச்சிற்கிடையில் வீழ்ச்சியுற்றன. மாறாக, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டத்தாபனத்தின் கடன் வழங்கல் வீதங்கள் 18 – 22 சதவீத வீச்சிலிருந்து 1995 சனவரியில் 20 – 24 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிற்கு அதிகரித்தன. அதேவேளை தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கல் வீதங்கள் 1994 இறுதியல் 16.5 – 22.0 சதவீதங்களுக்கிடையிலான வீச்சிலிருந்து 19.5 – 26 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்தன. அதேவேளை வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் சிறிய நடுத்தர கைத்தொழில்கள் IV திட்டத்தின் கீழான மீள்

## அட்டவணை 10.4

### வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் 1994 - 1995

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | மாதாந்த எண் தொகைகளின் சராசரி | | காலப்பகுதி முடிவில் | |
|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1994 | 1995 |
| கையிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நியதி ஒதுக்குத் தேவைகளும் உட்பட) | 25,844 | 29,724 | 27,957 | 35,449 |
| வெளிநாட்டு நிலுவைகள் | 19,873 | 22,748 | 24,236 | 21,835 |
| திறைசேரி உண்டியல்கள் | 13,957 | 12,592 | 15,143 | 11,552 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் | 10,904 | 13,434 | 10,773 | 14,799 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் | 70,578 | 78,498 | 78,109 | 83,635 |
| மொத்த முதலீடுகள் (அ) | 8,531 | 8,033 | 10,861 | 7,715 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் (ஆ) | 123,808 | 150,484 | 132,447 | 172,194 |
| கேள்வி வைப்புக்கள் (இ) | 37,377 | 39,848 | 41,678 | 42,548 |
| தவணை, சேமிப்பு வைப்புக்கள் (ஈ) | 138,600 | 168,327 | 152,601 | 189,978 |
| மொத்த வைப்புக்கள் | 175,977 | 208,175 | 194,279 | 232,526 |
| | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 69.1 | 74.6 | 67.1 | 83.3 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 14.7 | 14.3 | 14.4 | 15.2 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் | 11.3 | 10.9 | 12.5 | 9.4 |
| மொத்த வைப்புக்களுக்கு திறைசேரி உண்டியல்களின் விகிதம் | 7.9 | 6.0 | 7.8 | 5.0 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் | 6.2 | 6.5 | 5.5 | 6.4 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் | 188.8 | 197.0 | 187.4 | 196.6 |
| மொத்த வைப்புகளுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் | 40.1 | 37.7 | 40.2 | 36.0 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீட்டின் விகிதம் | 4.8 | 3.9 | 5.6 | 3.3 |
| மொத்த வைப்புகளுக்குக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் | 70.4 | 72.3 | 68.2 | 74.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) அரச, அரச உத்தரவாதப் பிணைகளும், மத்திய வங்கிப் பிணைகளும், தனியார் பிணைகளும், திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(ஆ) கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் நீங்கலாக

(இ) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்கள் நீங்கலாக.

(ஈ) சிறப்பு சேமிப்பு திட்டங்களின் கீழ் அரச வங்கிகளால் 1994 ஆம் ஆண்டிலும் 1995 ஆம் ஆண்டிலும் நீண்டகால தவணை வைப்புக்களாகத் திரட்டப்பட்ட தொகையான ரூ. 37,190 இலட்சத்தையும் ரூ. 43,220 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்ட எண் தொகைகளுக்கும் இவ்வறிக்கையில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்ட அதே எண் தொகைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் வரைவிலக்கண வேறுபாட்டினால் ஏற்பட்டவையாகும்.

நிதியிடல் வீதம் 1994 இறுதியின் 13.6 சதவீதத்திலிருந்து 1995 இறுதியில் 12.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

### 10.4. வர்த்தக வங்கித் தொழில்

கடுமையான நாணய கொள்கை, உயர்ந்த வட்டி வீதங்கள் தனியார்துறையின் விரிவடைந்து செல்லும்

கொடுகடன் கேள்வி என்பனவற்றின் பின்னணியில், வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 18.5 சதவீதம் (ரூ. 122,040 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் 7 சதவீதம் (ரூ. 55,260 இலட்சம்) கொண்ட மெதுவான வேகத்தில் அதிகரித்தது. அதன் விளைவாக, மொத்த வைப்புக்களில் திரவச் சொத்துக்களின் விகிதம் 1994 இறுதியில் 40சதவீதத்திலிருந்து 1995இல் 36 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

### சொத்துக்கள், பொறுப்புக்களின் அமைப்பு

இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் பெயரளவு மொ.உ. உற்பத்தியின் 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 19 சதவீதத்தினால் உயர்வடைந்து வங்கித் தொழில் நடவடிக்கைகள் மேலும் ஆழமாக வேரூன்றியமையை எடுத்துக்காட்டின. மொத்தச் சொத்துக்களில் மொத்தக் கடன்களினதும் முற்பணங்களினதும் பங்கு 1994 இன் 51 சதவீதத்திலிருந்து 1995 இல் 55 சதவீதத்திற்கு அதிகரித்து உயர்வான கொடுகடன் கேள்வியைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில், மொத்தக் கடன்களும் முற்பணங்களும் 30.6 சதவீதத்தினால் (ரூ. 437,720 இலட்சம்) அதிகரித்தமைக்கு மேலதிகப் பற்றுவசதிகள் 39.5 சதவீதத்தினாலும் (ரூ. 182,720 இலட்சம்) கடன்கள் 25.0 சதவீதத்தினாலும் (ரூ. 214,740 இலட்சம்) அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

பொறுப்புக்கள் பக்கத்தில், முக்கியமான அதிகரிப்புக்கள் மொத்த உள்நாட்டு வைப்புக்கள் செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்குகள் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகளுடனான வெளிநாட்டு நாணய பொறுப்புக்கள் என்பனவற்றில் முக்கியமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் மொத்த வைப்புக்கள் 19.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தவணை சேமிப்பு வைப்புக்கள் 24.7 சதவீதத்தினாலும் (ரூ. 367,740 இலட்சம்) கேள்வி வைப்புக்கள் 2.1 சதவீதத்தினாலும் (ரூ. 6,680 இலட்சம்) அதிகரித்தமையே காரணமாகும். மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக மொத்த வைப்புக்கள் முன்னைய ஆண்டினைப் போன்றே ஏறத்தாழ 68 சதவீதத்தில் விளங்கியது. இவ்வாண்டில் உள்நாட்டு வங்கிகளுக் கிடையிலான கடன்பாடுகள் 34.6 சதவீதத்தினால் (ரூ. 36,680 இலட்சம்) அதிகரித்த வேளையில் வெளிநாட்டுக் கடன்பாடுகளும் 32.5 சதவீதத்தினால் (ரூ. 6.827 இலட்சம்) அதிகரித்தமையானது உயர்ந்த கொடுகடன் கேள்வியைப் பிரதிபலிப்பதாயுள்ளது. இது வைப்புக்களில் ஏற்பட்ட நேரிணையான அதிகரிப்புடன் இணைந்து செல்வதாக இருக்கவில்லை.

அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும் ஒதுக்குகளும் 183 சதவீதத்தினால் (ரூ. 51,810 இலட்சம்) அதிகரித்தமைக்கு மூன்று புதிய வங்கிகள் தொழிற்பாடுகளைத் தொடங்கியமை ஓரளவு காரணமாக இருந்த வேளையில் மொத்த சொத்துக்களுக்கான அவற்றின் விகிதம் முன்னைய ஆண்டினைப் போன்றே 1995 இலும் ஏறத்தாழ 10 சதவீதம் விளங்கியது.

### நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

ஆண்டினை முழுமையாக நோக்குகையில், வெளிநாட்டுத் துறை, வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள், வர்த்தக வங்கிகளின் மூலதன மற்றும் ஒதுக்குத் தளம் உட்பட ஏனைய பொறுப்புக்கள் அரசதுறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பன வர்த்தக வங்கிகளுக்கான மூலவளங்களின் தேறிய வழங்குனர்களாக இருந்த வேளையில் ஏனைய உள்நாட்டுத் தனியார் துறை, மத்திய வங்கி மற்றும் கூட்டுறவு நிலையங்கள் என்பன வர்த்தக வங்கிகளிலிருந்து மூலவளங்களை ஈர்த்துக் கொண்டன. நிதிகளின் மொத்த தேறிய கிடைப்பனவு 1994 இன் ரூ. 157,650 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ. 134,780 இலட்சத்தினால் அதிகரித்தது.

1995 இல் வெளிநாட்டுத் துறையானது கடன்பாடுகள், வைப்புக்கள் மற்றும் ஏனைய நிலுவைகள் ஆகிய வடிவங்களில் வர்த்தக வங்கிகளுக்கு நிதிகளை வழங்கும் முக்கிய மூலமாக விளங்கியதுடன் ரூ. 63,720 இலட்சம் கொண்ட தொகையை வழங்கியது. மாறாக முன்னைய இரு ஆண்டுகளிலும் இத்துறை வர்த்தக வங்கி நிதியங்களின் தேறிய பயன்பாட்டாளராக விளங்கியது.

முன்னைய ஆண்டில் வழங்கிய ரூ. 6,040 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் அரசதுறை ரூ. 5,950 இலட்சம் கொண்ட தேறிய மூலவளங்களினை வழங்கியது. இதற்கு இவ்வாண்டில் அரச வைப்புக்கள் ரூ. 1,930 இலட்சத்தினால் அதிகரித்தமையும் திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ரூ. 41,860 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையும் முக்கிய காரணங்களாகும். இதேவேளையில் அதிகரிக்கப்பட்ட இறக்குமதி உண்டியல்கள், குறுங்காலக் கொடுகடன் மற்றும் மேலதிக பற்று வசதிகள் என்பனவற்றிற்கூடாக அரசதுறை ரூ. 37,840 இலட்சம் பெறுமதியான வர்த்தக வங்கி நிதியங்களை ஈர்த்துக்கொண்டது. 1994 இல் நிரம்பல் செய்த ரூ. 63,430 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூபா 350 இலட்சத்தினை

## அட்டவணை 10.5

### வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 1994 - 1995

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | மாற்றம் 1994 | | மாற்றம் 1995 | |
|---|---|---|---|---|
| | மூலங்கள் | பயன் பாடுகள் | மூலங்கள் | பயன் பாடுகள் |
| **1. அரசதுறை** | **605** | | **595** | |
| அரச பிணைகளின் உடமைகள் | | 1,411 | 4,186 | - |
| வைப்புக்கள் | 2,986 | | 193 | - |
| இறக்குமதி உண்டியல்கள் | | 398 | | 2,548 |
| குறுந்தவணைக் கொடுகடன் | | 605 | | 857 |
| மேலதிகப் பற்றுக்கள் | 32 | | | 380 |
| **2. மத்திய வங்கி** | | **9,107** | | **4,774** |
| கடன்பாடுகள் | | 1,789 | - | 428 |
| ஒதுக்குகள் | | 3,725 | - | 7,180 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் | | 3,234 | | |
| கையிலுள்ள காசு | | 359 | | |
| **3. அரச கூட்டுத்தாபனங்கள்** | **6,343** | | **35** | |
| வைப்புக்கள் | 3,732 | | 3,399 | - |
| முற்பணங்கள் | 2,611 | | | 3,363 |
| **4. கூட்டுறவுகள்** | **127** | | | **1,832** |
| வைப்புக்கள் | 764 | | | 434 |
| முற்பணங்கள் | | 638 | | 1,398 |
| **5. ஏனைய உள்நாட்டு தனியார்துறை** | | **3,192** | - | **6,873** |
| வைப்புக்கள்* | 20,724 | | 31,303 | - |
| உள்நாட்டு உண்டியல்கள் | 129 | | - | 449 |
| இறக்குமதி உண்டியல்கள் | 333 | | | 471 |
| மேலதிகப் பற்றுக்கள் | | 7,067 | - | 15,956 |
| கடன்கள் | | 13,789 | - | 20,705 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு | | 3,522 | - | 595 |
| **6. வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள்** | **2,025** | | **2,005** | |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை | | 1,180 | - | 2,090 |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் கடன்பாடுகளும் | 3,204 | | 4,095 | |
| **7. வெளிநாட்டுத் துறை** | | **3,466** | **6,372** | - |
| கடன்பாடுகள் | 17 | | 683 | - |
| வைப்புக்கள் | 3,609 | | 3,786 | - |
| வெளிநாட்டு நிலுவைகள் - ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட | | 7,092 | 1,904 | - |
| **8. ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்** | **6,666** | | **4,471** | |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 6,427 | | 5,182 | - |
| நிலையான ஏனைய சொத்துக்கள் | 2,753 | | | 7,374 |
| ஏனைய பொறுப்புக்கள் | | 2,514 | 6,663 | |
| மொத்த தேறிய மூலங்கள்/பயன்பாடுகள் | 15,765 | | 13,478 | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* சிறப்புச் சேமிப்புத் திட்டத்தின்கீழ் இரு அரச வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்.

குறிப்பு: தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறைக்குமான தேறிய மூலங்களை அல்லது தேறிய பயன்பாட்டினை அவை பொருந்துமிடங்களைப் பொறுத்துக் குறிக்கின்றன.

வழங்கி அரச கூட்டுத்தாபனங்கள் மிகச்சிறிய அளவிலான தேறிய வழங்குனராக விளங்கியதான இம்மாற்றத்திற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், இலங்கை மின்சபை ஆகிய முக்கிய மூன்று கூட்டுத்தாபனங்களினதும் அதிகரித்த கடன்பாடுகளே பெருமளவு காரணமாகும்.

அதிகரித்த மூலதன மற்றும் ஒதுக்குத் தளம் வங்கித் தொழில்முறைக்கு ரூ. 51,820 இலட்சத்தினைக் கொண்டுவந்தது. இதற்கு 1995 இன் இறுதிப்

## அட்டவணை 10.6

## நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள்* 1994 – 1995

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | | குறுங்காலம் | | நடுத்தரக்காலம் | | நீண்டகாலம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) தொகை ரூ.ப.இ. | (2) (7) இன் % ஆக (1) | (3) தொகை ரூ.ப.இ. | (4) (7) இன் % ஆக (3) | (5) தொகை ரூ.ப.இ. | (6) (7) இன் % ஆக (5) | (7) தொகை ரூ.ப.இ. | (8) மொத்தத் தன் சத வீதமாக (7) |
| 1. வர்த்தகம் | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 45,453 | 72.6 | 11,835 | 18.9 | 5,293 | 8.5 | 62,580 | 43.9 |
| 1994 | திசெம்பர் | 49,336 | 76.4 | 11,648 | 18.0 | 3,566 | 5.5 | 64,550 | 43.6 |
| 1995 | செத்தெம்பர் | 58,330 | 76.0 | 13,384 | 17.4 | 5,034 | 6.6 | 76,749 | 43.7 |
| 2. நிதியியல் | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 3,422 | 54.5 | 2,245 | 35.7 | 617 | 9.8 | 6,284 | 4.4 |
| 1994 | திசெம்பர் | 3,623 | 55.6 | 2,266 | 34.8 | 629 | 9.6 | 6,518 | 4.4 |
| 1995 | செத்தெம்பர் | 5,428 | 67.0 | 2,045 | 25.2 | 629 | 7.8 | 8,102 | 4.6 |
| 3. வேளாண்மை | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 6,991 | 69.4 | 1,913 | 19.0 | 1,175 | 11.7 | 10,179 | 7.1 |
| 1994 | திசெம்பர் | 6,974 | 66.3 | 2,862 | 27.2 | 681 | 6.5 | 10,517 | 7.1 |
| 1995 | செத்தெம்பர் | 7,248 | 69.2 | 2,423 | 23.1 | 802 | 7.7 | 10,473 | 6.0 |
| 4. கைத்தொழில்** | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 13,552 | 39.5 | 3,469 | 17.8 | 2,488 | 12.8 | 19,509 | 13.7 |
| 1994 | திசெம்பர் | 13,321 | 68.3 | 3,561 | 18.3 | 2,618 | 13.4 | 19,501 | 13.2 |
| 1995 | செத்தெம்பர் | 17,833 | 72.9 | 3,988 | 16.3 | 2,639 | 10.8 | 24,460 | 13.9 |
| 5. சுற்றுலா | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 998 | 50.2 | 467 | 23.5 | 524 | 26.4 | 1,989 | 1.4 |
| 1994 | திசெம்பர் | 1,149 | 49.0 | 477 | 20.3 | 721 | 30.7 | 2,346 | 1.6 |
| 1995 | செத்தெம்பர் | 1,441 | 50.6 | 557 | 19.5 | 853 | 29.9 | 2,851 | 1.6 |
| 6. வீடமைப்பு | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 3,622 | 18.6 | 4,429 | 22.8 | 11,383 | 58.6 | 19,435 | 13.6 |
| 1994 | திசெம்பர் | 3,778 | 19.3 | 6,689 | 34.2 | 9,073 | 46.4 | 19,539 | 13.2 |
| 1995 | செத்தெம்பர் | 4,323 | 21.2 | 6,138 | 30.1 | 9,899 | 48.6 | 20,359 | 11.6 |
| 7. நுகர்வு | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 7,677 | 70.0 | 1,611 | 14.7 | 1,678 | 15.3 | 10,965 | 7.7 |
| 1994 | திசெம்பர் | 6,701 | 61.1 | 1,808 | 16.5 | 2,451 | 22.4 | 10,961 | 7.4 |
| 1995 | செத்தெம்பர் | 7,655 | 57.2 | 2,959 | 22.1 | 2,772 | 20.7 | 13,386 | 7.6 |
| 8. ஏனைய கடன்கள் | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 7,459 | 63.2 | 3,062 | 25.9 | 1,284 | 10.9 | 11,806 | 8.3 |
| 1994 | திசெம்பர் | 8,284 | 59.0 | 4,466 | 31.8 | 1,282 | 9.1 | 14,033 | 9.5 |
| 1995 | செத்தெம்பர் | 12,379 | 63.7 | 5,596 | 28.8 | 1,447 | 7.4 | 19,422 | 11.0 |
| 9. மொத்தம் | | | | | | | | | |
| 1994 | செத்தெம்பர் | 89,174 | 62.5 | 29,030 | 20.4 | 24,442 | 17.1 | 142,647 | 100.0 |
| 1994 | திசெம்பர் | 93,166 | 63.0 | 33,778 | 22.8 | 21,021 | 14.2 | 147,964 | 100.0 |
| 1995 | செத்தெம்பர் | 114,637 | 65.2 | 37,090 | 21.1 | 24,074 | 13.7 | 175,800 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

** பொறியியல், கட்டட வர்த்தகம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கும்.

அட்டவணை 10.7

பிணைகளின்படி முற்பணங்கள் * 1994 திசெம்பர் - 1995 செத்தெம்பர்

| விடயம் | 1994 செத்தெம்பர் 30 தொகை (ப.இ.ரூ.) | 1994 செத்தெம்பர் 30 மொத்தத்தின் % | 1994 திசெம்பர் 31 தொகை (ப.இ.ரூ.) | 1994 திசெம்பர் 31 மொத்தத்தின் % | 1995 செத்தெம்பர் 30 தொகை (ப.இ.ரூ.) | 1995 செத்தெம்பர் 30 மொத்தத்தின் % |
|---|---|---|---|---|---|---|
| 1. ஆவண உண்டியல்கள் | 7,831 | 5.5 | 6,426 | 4.3 | 5,706 | 3.2 |
| 2. அரச பிணைகள் | 6,426 | 4.5 | 7,520 | 5..1 | 6,237 | 3.5 |
| 3. கூட்டுப் பங்கு நிலையங்களின் பங்குகள், முறிகள், தொகுதிக் கடன்கள், ஆயுட் காப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய பல்வகை விடயங்கள் | 4,634 | 3.2 | 2,734 | 1.8 | 3,162 | 1.8 |
| 4. நிலையான, சேமிப்பு, மற்றும் காசு வைப்புக்களும் வைப்புச் சான்றிதழ்களும் | 43,364 | 9.4 | 16,220 | 11.0 | 15,541 | 8.8 |
| 5. வர்த்தக இருப்புக்கள் | 42,634 | 8.9 | 12.164 | 8.2 | 15,140 | 8.6 |
| 6. அசைவற்ற சொத்து, பொறித் தொகுதி, பொறி | 35,017 | 24.5 | 38,586 | 26.1 | 43,180 | 24.6 |
| 7. தனியாள் உத்தரவாதங்கள், வாக்குறுதிப் பத்திரங்கள் | 23,405 | 16.4 | 22,275 | 15.1 | 24,680 | 14.0 |
| 8. நம்பிக்கைப் பற்றுச்சீட்டுக்கள் | 5,485 | 3.8 | 7,510 | 5.1 | 10,197 | 5.8 |
| 9. தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் | 1,776 | 1.2 | 945 | 0.6 | 1,051 | 0.6 |
| 10. உழவுப் பொறிகளும் - உந்து ஊர்திகளும் | 2,155 | 1.5 | 2,096 | 1.4 | 2,220 | 1.3 |
| 11. ஏனைய பிணைகள் | 18,698 | 13.1 | 17,178 | 11.6 | 27,417 | 15.6 |
| 12. பிணைகளற்றவை | 11,222 | 7.9 | 14,311 | 9.7 | 21,268 | 12.1 |
| மொத்தம் | 142,646 | 100.0 | 147,965 | 100.0 | 175,800 | 100.0 |

× சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகளை நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களும் நீங்கலாக.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பகுதியில் மூன்று புதிய வர்த்தக வங்கிகள் இலங்கை வங்கித் தொழில் அமைப்புக்குள் நுழைந்தமை ஓரளவு காரணமாகும். அத்துடன், முன்னைய ஆண்டினைப்போன்றே வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தேறிய அடிப்படையில் நிதியங்களின் மூலமாக விளங்கி வர்த்தக வங்கிகளில் மூலவளத்தளத்திற்கு ரூ. 20,050 இலட்சத்தினை வழங்கின.

1995 இல் ஏனைய உள்நாட்டு தனியார் துறை வர்த்தக வங்கி நிதிகளின் முக்கிய பயன்பாட்டாளராக மாறியது. முன்னைய ஆண்டின் ரூ. 31,920 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் தேறிய அடிப்படையில் இவை ரூ. 68,730 இலட்சத்தினைப் பயன்படுத்தின. ஆண்டு வளர்ச்சி வீதம் 1994 இன் 21.2 சதவீதத்திலிருந்து 1995 இல் 28.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தமையினால் இவ்வதிகரிப்பானது தனியார்துறைக்கான கொடுகடன் அதிகரிப்புடன் இணைந்து செல்கின்றது. முக்கியமாக அதிகரித்த மேலதிகப் பற்றுக்கள் மற்றும் புதிய கடன் வசதிகள் என்பனவற்றினூடாக வர்த்தக வங்கிகள் ரூ. 366,600 இலட்சம் வரையிலான நிதியங்களை வழங்கின. அதேவேளை, போட்டிச் சூழலில் புதிய வழிமுறைகள் மற்றும் திட்டங்களினூடாக வைப்புக்களைத் திரட்டுவதற்கான முயற்சிகளை வர்த்தக வங்கிகள் மேற்கொண்டமையிலிருந்து ரூ. 313,030 இலட்சம் பெறுமதியான மேலதிக வைப்புக்களைத் திரட்டுவதற்கு வங்கிகளுக்கு இயலுமாக இருந்தது.

மத்திய வங்கி, வர்த்தக வங்கித் தொழில் முறையிலிருந்து ஒதுக்குத் தேவைப்பாடுகளின் பேரில் நிதிகளைப் பெற்றதன் மூலமாக மத்திய வங்கி ரூ. 47,740 இலட்சம் பெறுமதியான நிதியினை ஈர்த்துக்கொண்டது. அதிகரித்த வைப்புத்தளம் தொடர்பாக ரூ. 71,800 இலட்சத்தினால் அதிகரித்த மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகள், இவ்வாண்டில் மத்திய வங்கிப் பிணைகளின் முதலீடுகள் ரூ. 31,460 இலட்சத்தினால் பெருமளவு வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக ஓரளவு எதிரீடு செய்யப்பட்டன. அதேவேளை இவ்வாண்டில் கூட்டுறவு நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்ட நிதியங்கள் ரூ. 18,320 இலட்சமாக விளங்கின. முற்பணங்கள் ரூ. 13,980 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டமையாலும் வைப்புக்கள் ரூ. 4,340 இலட்சத்தினால் குறைக்கப்பட்டமையாலும் இது நிகழ்ந்தது.

## வர்த்தக வங்கிக் கடன்களும் முற்பணங்களும்*

வர்த்தக வங்கிகள் அவற்றின் கடன் வழங்கலை பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் அதிகரித்தன. கடன்கள் முற்பணங்களில் பெருந்தொகையானவை குறுங்காலத் தன்மையினையும் வர்த்தக நோக்கங்களையும் கொண்டிருந்தன. குறுங்கால முற்பணங்கள் மொத்த முற்பணங்களில் 64 சதவீதத்திற்கு (ரூ. 1,098,780 இலட்சம்) வகைகூறிய வேளையில் நடுத்தர நீண்டகால முற்பணங்களின் சார்புரீதியான பங்குகள் முறையே 22 சதவீதமாகவும் (ரூ. 370,900) இலட்சம். 14 சதவீதமாகவும் (ரூ. 240,740 இலட்சம்) விளங்கின.

வர்த்தக வங்கிகளினது கடன் வழங்கல் தொழிற்பாடுகளுக்கு வர்த்தக நடவடிக்கைகளே தொடர்ந்தும் மிக்க கவர்ச்சிகரமான முறையாக விளங்கின. மொத்தக் கடன்கள் முற்பணங்களில் ஏறத்தாழ 50 சதவீதம் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தக நடவடிக்கைகளுக்கு நிதியிடலுக்காக வழிப்படுத்தப்பட்டன. அத்தகைய கடன்களும், முற்பணங்களும் 1995 செத்தெம்பருடன் முடிவடைந்த பன்னிரண்டு மாதகாலத்தில் 18 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இக்கொடுகடனில் பெருந்தொகை தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளுக்கானதாக இருந்தது.

வர்த்தக வங்கிக் கடன் வழங்கலில் இரண்டாவது பெரும் துறையாக கைத்தொழில் துறை விளங்கியது. 1994 இன் நேரிணையான காலப்பகுதிக்குரிய 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 செத்தெம்பருடன் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் கைத்தொழில் கொடுகடன் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் மொத்தக் கடன்களில் அதன்பங்கு 15 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது. இரு அரச வங்கிகளும் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டத்திற்குள் மீண்டும் நுழைந்தமையே இதற்கான ஓரளவு காரணமாகும். அத்துறையிலும்கூட வெளிநின்ற கொடுகடனில் பெரும்பங்கு குறுங்கால வகையின் கீழேயே காணப்பட்டது. இத்துறையில் குறுங்கால கொடுகடன்களின் பங்கு 1994 செத்தெம்பர் இறுதியில் அத்துறைக்கான மொத்தக் கொடுகடனில் 70 சதவீதத்திலிருந்து 1995 செத்தெம்பரிறுதியில் 72 சதவீதத்திற்கு அதிகரித்தது.

தேயிலை, இறப்பர், தெங்கு, நெல், கால்நடை வளர்ப்பு, மற்றும் பாற்பண்ணை என்பனவற்றை உள்ளடக்கிய வேளாண்மைத்துறைக்கான கொடுகடன் 1994 செத்தெம்பரின் 10 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 செத்தெம்பர் இறுதியுடன் முடிவடைந்த 12 மாத காலப் பகுதியில் 4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த வெளிநின்ற கடன்கள் முற்பணங்களில் வேளாண்மைக் கொடுகடனின் பங்கு முன்னைய ஆண்டினைப் போன்று 7 சதவீதத்தில் காணப்பட்டது.

வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி தொடர்பான வெளிநின்ற வங்கிக் கொடுகடன் 1995 செத்தெம்பர் இறுதியில் மொத்த வெளிநின்ற கொடுகடனில் 13 சதவீதத்திற்கு வகைகூறியது. இத்துறையின் நடவடிக்கைகள் மந்தமாகக் காணப்பட்டமையினால் இத்துறைக்கான வங்கிக் கொடுகடன் ஆய்விற்குரிய காலப்பகுதியில் 5 சதவீதமான மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. வீடமைப்பு சொத்து அபிவிருத்திக்கான முற்பணங்களில் பெரும்பங்கு (59 சதவீதம்) நீண்டகால வகைக்குள்ளேயே காணப்பட்டன. இதேவேளையில் நிதித்துறைக்கான கொடுகடன் ரூ. 71,840 இலட்சமாக விளங்கி மொத்த வெளிநின்ற கொடுகடனில் 5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 1995 செத்தெம்பர் இறுதியில் 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் காட்டியது.

வங்கித்தொழில் துறையிலிருந்தான மொத்தக் கொடுகடனில் சார்பு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி காணப்பட்டபோதும் நுகர்வு நோக்கங்களுக்கான கொடுகடனின் வளர்ச்சி 1995 இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. நீண்டகால நுகர்வுப் பொருட்களையும் ஏனைய தனிப்பட்ட தேவைக்கான பொருட்களையும் உள்ளடக்கி இவ்வகைக்கான கொடுகடன் முன்னைய ஆண்டின் 87 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் மட்டுமே உயர்வடைந்ததுடன் 1995 செத்தெம்பர் இறுதியில் மொத்த வெளிநின்ற கொடுகடனில் 8 சதவீதமாக விளங்கியது.

சந்தையில் ஏனைய வட்டி வீதங்களில் அவதானிக்கப்பட்ட போக்கினைப் பின்பற்றி கடன்கள் முற்பணங்களின் மீது விதிக்கப்பட்ட வட்டிவீதங்களை வங்கிகள் அதிகரித்தன. அனைத்துக் கடன்கள், முற்பணங்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் 1994 திசெம்பர் இறுதியின் 19.7 சதவீதத்திலிருந்து 1995 செத்தெம்பர் இறுதியில் 20.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. 1995 செத்தெம்பர் இறுதியில் வர்த்தக வங்கிக் கடன்கள் முற்பணங்களில்

* இப்பகுப்பாய்வுகள் 1995 இன் முதல்மூன்று காலாண்டுகளுக்குமான தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

35 சதவீதமானவை 1994 செத்தெம்பர் இறுதியில் நிலவிய விகிதத்தினை ஒத்ததாக 21 - 25 சதவீத வீச்சில் வட்டிவீதங்களைக் கொண்டிருந்தன. அதேவேளை கடன்கள் முற்பணங்களில் 16 சதவீதமானவை 18 - 20 சதவீத வீச்சிலான வட்டிவீதங்களைக் கொண்டிருந்தன. 1995 இல் 26 - 30 சதவீத வீச்சில் வட்டி வீதங்களை உழைக்கும் கடன்கள் முற்பணங்களின் பங்கு 1994 இன் 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10 சதவீதமாகக் காணப்பட்டது.

## 10.5. மத்திய வங்கித் தொழில்

கடினமான நாணயக் கொள்கையின் பின்னணியில் நாணயத்தளம் 1994 இன் 20.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ. 785,870 இலட்சத்திற்கு 15.5 சதவீதம் கொண்ட மெதுவான வீத வளர்ச்சி வீதத்தில் விரிவடைந்தது. முன்னைய ஆண்டினைப்போலன்றி ஒதுக்குப் பணவளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்கு புறத்தூண்டுதல் காணப்படவில்லை. எனினும், வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனையானது நாணயத்தளம் ரூ. 101,980 இலட்சத்தினால் விரிவடைவதற்கு உதவியது. மேலும், மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு (ரூ. 76,620 இலட்சத்தினால்) 1995 இன் நாணயத்தளம் வளர்ச்சியடைய உதவிய முக்கிய காரணியாக அமைந்தது.

### சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பு

மத்திய வங்கியின் மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள் 11.3 சதவீதத்தால் (ரூ. 175,480 இலட்சம்) விரிவடைந்து 1995 இன் இறுதியில் ரூ. 1,735,060 இலட்சமாக விளங்கின. முன்னைய ஆண்டில் மொத்த சொத்தக்கள்/பொறுப்புக்களின் வளர்ச்சி 16.7 சதவீதமாகக் (ரூ. 223,240 இலட்சம்) காணப்பட்டது.

பொறுப்புக்கள் பக்கத்தில், ஏற்பட்ட அதிகரிப்பானது மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்தக்களின் 12.1 சதவீத அதிகரிப்பினதும் (ரூ. 73,230 இலட்சம்) பன்னாட்டு ஒதுக்கின் 10.7 சதவீத அதிகரிப்பினதும் (ரூ. 102,250 இலட்சம்) இணைந்த விளைவாலும். உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு திறைசேரி உண்டியல் உடைமைகளிலும், அரசுக்கான கடன்கள் முற்பணங்களிலும் ஏற்பட்ட பெருமளவிலான அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

சென்மதி நிலுவையில் மொத்த குறையொன்றின் மத்தியிலும் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு 1994 இன் ரூ. 956,710 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 1,058,960 இலட்சத்துக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனவும், மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய வெளிநாட்டு முதலீட்டு வருவாயும், செலாவணிவீத வேறுபாடுகள் தொடர்பிலான மீள் மதிப்பீட்டுத் தாக்கங்களுமே காரணமாகும்.

அதே வேளையில், அதிகரித்தவைப்புத் தளத்திற்கு ஏற்ப அதிகரித்த ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்கு நேரிணையாக வர்த்தக வங்கிகளின் வைப்புக்களில் ரூ. 70,210 இலட்சத்தாலேற்பட்ட அதிகரிப்புக் காரணமாக மத்திய வங்கியின் வைப்புப்பொறுப்புக்கள் ரூ. 130,740 இலட்சத்தால் அதிகரித்தவேளையில் அதிகரிக்கப்பட்ட அமைப்புச்சீராக்க வசதிகளின் கீழ் சிஎஉ 560 இலட்சங் கொண்ட எடுப்பனவுகளையும் மீள்மதிப்பீட்டுச் சீராக்கங்களையும் பிரதிபலிக்கும் வகையில் பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் ரூ. 70,210 இலட்சத்தினால் அதிகரித்தன. மத்திய வங்கியின் நாணய வழங்கல்கள் (தாள்களும் நாணயங்களும்) எளிதான நாணயக் கொள்கையின் தாக்கத்தை மறைமுகமாகப் பிரதிபலிக்கும் வகையில் 1994 இன் ரூ. 71,320 இலட்சங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ. 36,030 இலட்சத்தால் அதிகரித்தன.

## 10.6. வங்கித் தொழில் அபிவிருத்தி கிளை விரிவாக்கம்

நிதித்துறையில் காணப்பட்ட போட்டித் தன்மையும் இயக்கவிசையும் 1995 இல் மூன்று புதிய வர்த்தக வங்கிகள் தமது தொழிற்பாடுகளை ஆரம்பித்ததன்மூலமும் மேலும் அதிகரிக்கப் பட்டதுடன், ஆண்டின் இறுதியில் தொழிற்பட்ட வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 26 ஆக விளங்கியது. வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி, வரையறுக்கப்பட்ட யூனியன் பாங் ஒவ் கொழும்பு ஆகிய இரு உள்நாட்டு தனியார் வர்த்தக வங்கிகள் இவ்வாண்டில் திறக்கப்பட்டதன்மூலம் உள்நாட்டு வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 18 ஆக அதிகரித்தது.

வங்கித் தொழில் பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தைத் தொடர்ந்து இவ்வாண்டில் வங்கிக்கிளை வலையமைப்பும் தொடர்ந்து அதிகரித்தது. 1995 இல் வங்கிக் கிளை விரிவாக்கத்தில் காணப்பட்ட முக்கியமான அபிவிருத்தி யாதெனில் இந்தியாவிலும், பாகித்தானிலும் இலங்கை வங்கியின் கிளைகளைத் திறந்து இவ்விரு நாடுகளுடனுமான இலங்கையின் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதி

## அட்டவணை 10.8

### வங்கிக் கிளைகளின் பரம்பல் 1993 - 1995

| வகை | | 1993 | 1994 | 1995 * |
|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை | ... | 40 | 40 | 43 |
| 1.1 வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை | ... | 23 | 23 | 26 |
| 1.1.1 உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை | ... | 6 | 6 | 18 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை | ... | 17 | 17 | |
| 1.2 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) | ... | 17 | 17 | 17 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை (ஆ) | ... | 1,093 | 1,134 | 1,166 |
| 2.1 வர்த்தக வங்கி கிளைகளின் எண்ணிக்கை | ... | 845 | 875 | 899 |
| 2.1.1 உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஈ) | ... | 812 | 840 | 863 |
| 2.1.1.1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 29 | 27 | 50 |
| 2.1.2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | | 33 | 36 | 36 |
| 2.2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் எண்னிக்கை | ... | 163 | 169 | 171 |
| 2.3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | | 85 | 90 | 96 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) 1985 இன் 15 ஆம் இலக்க பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலகங்கள் உட்பட.

(இ) விரிவாக்க அலுவலங்கங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் வெளிநாட்டுக் கிளைகள் உட்பட.

(ஈ) துணைக் கிளைகளையும் உள்ளடக்கும்

செய்து கொடுத்தமையாகும். முன்னைய ஆண்டில் 27 புதிய கிளைகளுடனொப்பிடுகையில் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் 1995 இல் 23 புதிய கிளைகளைத் (இவற்றில் 6 கிளைகள் இரு அரச வங்கிளால் திறக்கப்பட்டன) திறந்தன. வெளிநாட்டு வர்த்தக வங்கிகளால் திறக்கப்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை வரையறுக்கப்பட்ட கொரிய எக்ஸ் சேன்ஜ் வங்கியினால் திறக்கப்பட்ட கிளையொன்றுடன் 37 ஆக அதிகரித்தது. எனவே வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1994 இறுதியின் 875 இலிருந்து 1995 இறுதியில்.899 ஆக அதிகரித்தது. தேசிய சேமிப்பு வங்கியின் (தேசவ) ஆறு கிளைகளும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் இரண்டு கிளைகளும் அதிகரித்தமையின் காரணமாக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,168 ஆக அதிகரித்தது. இதன்படி ஒவ்வொரு 10,000 குடித்தொகைக்குமாக வங்கித் கிளைகளின் மொத்த எண்ணிக்கையினால் அளவிடப்பட்ட வாறான வங்கித் தொழில் செறிவானது 1994 இன் 0.6349 இலிருந்து 1995 இல் 0.6392 ஆக அதிகரித்தது.

மக்கள் வங்கியின் கிளைவலையமைப்பு இரு புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் 1995 இறுதியில் 325 ஆக அதிகரித்தது. இலங்கை வங்கி (இ.வ) சென்னையிலும், கராச்சியிலும் இரு வெளிநாட்டுக்கிளைகளைத் திறந்த வேளையில் தனது 9 வேளாண்மைப்பணி நிலையக் கிளைகளை (வேபநி) முழுமையான வங்கிக் கிளைகளாகத் தரமுயர்த்தியதன் மூலம் அதன் முக்கிய கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 1994 இறுதியின் 262 இலிருந்து 1995 இறுதியில் 273 ஆக உயர்த்தியது. இதன்படி, இலங்கை வங்கியின் கிளை வலையமைப்பு 273 முக்கிய கிளை களையும் 19 வேளாண்மைப் பணி நிலையக்கிளைகளையும் 23 கச்சேரிக் கிளைகளையும் 18 விரிவாக்க அலுவலகங்களையும், 3 கொடுப்பனவு அலுவலகங்களையும் நான்கு வெளிநாட்டு கிளைகளையும் உள்ளடக்கியிருந்தது.

அட்டன் நசனல் வங்கி ஏழு புதிய கிளைகளைத் திறந்த வேளையில் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி இவ்வாண்டில் இரு புதிய கிளைகளை நிறுவியது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ஏழு புதிய கிளைகளைத் திறந்து தனது கிளை வலையமைப்பை விரிவாக்கியது. அதே வேளையில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி மூன்று புதிய கிளைகளைத் திறந்தது.

தேசிய சேமிப்பு வங்கி (தேசேவ) ஆறு புதிய கிளைகளை நிறுவி தனது கிளை வலையமைபை 93 ஆக விரிவடையச் செய்தது. பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை இவ்வாண்டில் 17 ஆக மாற்றமின்றி இருந்தபோதிலும், கம்பகா மற்றும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொருகிளைகளைத் திறந்ததன் மூலம் 1995 இன் இறுதியில் நாட்டில் தொழிற்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் (தலைமை அலுவலக கிளைகள் உட்பட) மொத்த எண்ணிக்கை 171 ஆக அதிகரித்தது.

## முகவர் வங்கித் தொழில்

முன்னைய ஆண்டினைப் போன்றே, இரு அரச வங்கிகளும் மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தினூடாக முகவர் வங்கித் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. எனினும், மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின் நடவடிக்கைகள் கடந்த ஆண்டிலும் பார்க்க மிகக் குறைந்த வேகத்திலேயே இடம்பெற்றன. நடைமுறையிலுள்ள மக்கள் கடன் முன்னோடித் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1994 இன் 10,376 உடன் ஒப்பிடுகையில் 9,248 ஆக விளங்கியது. எனினும் இவ்வாண்டுக் காலத்தில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 30 இலட்சம் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற கடன்கள் 1995 இறுதியில் ரூ. 90 இலட்சமாக விளங்கின. அதேவேளை வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் சம்பத் தொழில் வழங்குனர் திட்டத்தின் கீழான இவ் வங்கியினால் வழங்கப்பட்டு வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 90 இலட்சமாக இருந்தவேளையில் இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டது. தீவிரமான சம்பத் தொழில் வழங்குனர்களின் மொத்த எண்ணிக்கை 1995 இறுதியில் 10 ஆகக் காணப்பட்டது.

## வங்கித் தொழில் வசதிகள்

வங்கித் தொழில்துறையில் காணப்பட்ட உயர் போட்டிச்சூழ்நிலையானது அதிகளவிலான புதிய வழிமுறைகளின் ஊடாக வர்த்தக வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர் பணிகளுக்கான வசதிகளை இவ்வாண்டில் மேலும் விரிவடையச் செய்வதற்கு வழிவகுத்தது. வர்த்தக வங்கிகளினால் இவ்வாண்டில் வழங்கப்பட்ட அத்தகைய வசதிகள் புதிய வைப்புக்கள் மற்றும் கடன் திட்டங்கள் மேலதிகமாக நிறுவப்பட்ட தன்னியக்கக் கூற்று பொறி (தகூபொ) மின்னியல் பண மாற்றல் வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன.

இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையின் (இ.வ.கொ.மு) நேரடிப் பற்று மாற்றல் திட்டம் 1995 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது நேரடிப் பற்றுக் கட்டளையொன்றின் ஊடாக வங்கியொன்றின் வாடிக்கையாளர் ஒருவரது கணக்கிலிருந்து இன்னொரு வங்கியின் வாடிக்கையாளர் ஒருவரது கணக்குக்கு நிதியங்களை மாற்றல் செய்வதனை இலகுவாக்குகிறது.

மக்கள் வங்கி ஆசிரியர்களுக்குக் கடன் வழங்குவதற்காக "குருசெத" என்ற பெயரில் வைப்புக்களும் கடன் வழங்கலும் என்ற புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. வேளாண்மைக் கடன்களைத்திருப்பதிகரமாக மீளச் செலுத்திய விவசாயிகளுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக "ரன் கொவி உபகாரத்திட்டம்" என அழைக்கப்படும் கொடுகடன் திட்டமொன்றை இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட "அட்டன் நசனல் வங்கி (அநவ) பெண்களுக்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட "பிரகதி காந்தா" நடைமுறைக் கணக்குகள் என அழைக்கப்படும். புதிய வைப்புத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் நடைமுறைக்கணக்குகளை வைத்திருக்கும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கியிலிருந்தான வழிகாட்டல்கள் உதவிகளுக்கு மேலதிகமாக இலவசமான நிலையிற் கட்டளை வசதி, இலவசக் காசோலைப் புத்தக வரைவுகள், பயணிகள் காசோலைகள் வழங்கல் மீதான சலுகைககள் ஆகிய வசதிகள் வழங்கப்பட்டன. அட்டன் நசனல் வங்கியும் புதிய கொடுகடன் வசதியொன்றை அறிமுகப்படுத்தியது. இதன் கீழ் கூட்டுறவுமொத்த விற்பனை நிறுவனத்தின் (கூமொவி) அங்கீகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு கொடுகடன் வசதிகள் வழங்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட ஸ்ரான்டட் சாட்டட் வங்கி அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பங்கு பற்றுவதற்கான தகுதியை உள்ளடக்கிய புதிய சேமிப்பு வைப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது.

வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி ஆகக்குறைந்தது ரூ. 25,000 ரூபாவை வைப்பில் வைத்திருக்கும் தனது நிலையான வைப்புக் கணக்குடையோருக்கும் அட்டன் நசனல் வங்கி ஆகக் குறைந்தது 25,000 ரூபாவை நிலுவையாக வைத்திருக்கும் தனது நடைமுறைக் கணக்கு வைத்திருப்போருக்கும் இலவச ஆயுள் காப்புறுதிப் பாதுகாப்பினை வழங்கின.

அட்டன் நசனல் வங்கியும், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் இவ்வாண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கடற்றொழில் துறை சமூக அபிவிருத்திக் கொடுகடன் திட்டத்தின் கீழ் (கதுசஅகொதி) பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக (பகொநி) விளங்கின. அத்துடன் அவ்விரு வங்கிகளும் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியுடன் இணைந்து சூழல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் கழிவு அகற்றல் நிதியத்துக்கான பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக விளங்கியதுடன் கைத்தொழில் முயற்சிகளுக்கு அவற்றின் கழிவுகளை ஆகக்குறைந்ததாக்குதல், மூலவள மீட்பு, சூழல் மாசுக் கட்டுப்பாடு மற்றும்கழிவு அகற்றல் போன்ற விடயங்களுக்காக குறைந்த செலவில் நிதியுதவியை வழங்குவதற்குமாக அந்த நிதியம் நிறுவப்பட்டது. இலங்கைவங்கியும், மக்கள் வங்கியும் மூலதன கோதுமை விகிதங்களையும் கணக்காய்வுத் தேவைகளையும் திருப்பதிகரமாக நிறைவேற்றியபின் சிறிய நடுத்தரக் கைத்தொழில் – IV இன் கீழ் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களாக மீள அனுமதிக்கப்பட்டன. இரு அரச வங்கிகளும் இதில் ஈடுபட்டமை சிறிய நடுத்தரக் கைத்தொழில் IV இன் கீழ் கிடைக்கத்தக்கதாகவிருந்த நிதியத்தின் பயன்பாட்டினை விரைவுபடுத்தியதுடன் 1995 இன் இறுதியில் நிதியத்திலிருந்த அனைத்தும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன.

1995 இல் 7 வங்கிகளில் தன்னியக்கக் கூற்றுப்பொறிகள் (தகூபொ) நிறுவப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் இருந்த தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை 25 ஆக விளங்கியது. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் ஊடாக வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான மீளப்பெறுகைகளை அனுமதித்தது.

## 10.7. கொடுகடன் தகவல் பணியகம்

1995 இல் இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகம் கொடுகடன் தகவல்களைச் சேகரித்தல், கடன்பாட்டாளர்களின் தரவுத்தளத்தினை அபிவிருத்தி செய்தல் கடன்பாட்டாளர்கள் மீதான கொடுகடன் அறிக்கைகளை வழங்குதல் என்பனவற்றின் மூலம் பங்குடமை கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் பணியாற்றியது.

பணியகம் தரவுத்தளத்தினை முன்னேற்ற கரமாகவும் விரைவாகவும் புதுப்பித்ததன் மூலம் அது அதன் அறிக்கைகளின் தரத்தினை முன்னேற்றக்கூடியதாக இருந்தமையின் மூலம் மிகத்துல்லியமானதும் நாளதுவரையாக புதுப்பிக்கப்பட்டதுமான அறிக்கையின் வழங்கலை உறுதிப்படுத்தமுடிந்தது. ஒழுங்கற்ற கடன்தரவுத்தளத்தின் புதுப்பித்தல் மாதாந்த இடைவெளிகளுக்குக் குறைக்கப்பட்டவேளையில் ஒழுங்கான கடன்களின் தரவுத்தளத்தில் பெரும் பங்கு தொடர்ந்தும் காலாண்டு இடை வெளியிலேயே புதுப்பிக்கப்பட்டது. அறிவிப்பு வரையறை, ஒழுங்கற்ற கடன்கணக்குகளுக்கு ரூ. 100,000 ஆகவும் ஒழுங்கான கடன்கணக்குகளுக்கு ரூ. 500,000 ஆகவும் விளங்கியது.

1995 இறுதியில் பணியகத்தின் தரவுத்தளம் 65,931 கடன் கணக்குகளைக் கொண்டிருந்தது. பணியகம் 1993 இன் 58,657 இற்கும் 1994 அன் 71,623 இற்கும் எதிராக 1995 இல் 98,282 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. பணியகத்தினால் வழங்கப்பட்ட கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. பணியகத்தினால வழங்கப்பட்ட கொடுகடன் அறிக்கைகள் தொடர்ந்தும் நேரடி முற்பணங்கள், மறைமுக முற்பணங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான துணைத்தகவல்கள் என்பனவற்றைப் பரந்தளவில் அடக்கியிருந்தன.

குத்தகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வணிக வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் வங்கியினால் நிருவகிக்கப்படும் தகவல்களை நாடுவதற்கு அனுமதிக்கும் விதத்தில் 1995 இல் கொடுகடன் தகவல் பணியகச்சட்டம் திருத்தப்பட்டது.

## 10.8. கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும்

### கிராமியக் கொடுகடன் கொள்கை

1995 இல் கிராமியக் கொடுகடன் கொள்கைக்கு எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறைக்கான வங்கிகளின் கடன் வழங்கல் அவற்றின் சொந்த நிதிகளிலிருந்தே மேற்கொள்ளப்பட்டதுடன் வேளாண்மையாளர்களுக்கான கடன் வழங்கல்வீதங்கள் சார்பு ரீதியில் தாழ்ந்த மட்டத்தில் பேணப்படுவதற்காக வட்டி உதவுதொகை அரசினால் செலுத்தப்பட்டது. கிராமியக் கொடுகடன் விடயத்தில் மீள் நிதியிடல் ஏற்பாடுகள் தவிர்ந்த மத்திய வங்கியின் ஈடுபாடு மாற்றமின்றியிருந்தது. வங்கி புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்குதல், கிராமியக்

## அட்டவணை 10.9

### புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள்

(31.12.1995 இல் உள்ளவாறு)

(ப.இ. ரூபாய்களில்)

| போகம் | அரச வங்கிகள் | | | உள்நாட்டு தனியார் வங்கிகள் | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்த கடன்கள் | | பு.அ.உ.கி. கொ.தி. கீழ் மொத்தக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | |
| 1991/92 பெரும் போகம் | 365 | 94 | 459 | 18 | 5 | 23 | 100 | 49 | 149 | 484 | 148 | 632 |
| 1992 சிறு போகம் | 96 | 57 | 153 | 1 | 4 | 5 | 38 | 38 | 76 | 134 | 99 | 233 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1992 | 461 | 151 | 612 | 19 | 10 | 29 | 138 | 87 | 225 | 618 | 247 | 865 |
| 1992/93பெரும்போகம் | 315 | 89 | 404 | 17 | 15 | 32 | 87 | 81 | 168 | 418 | 185 | 603 |
| 1993 சிறுபோகம் | 140 | 76 | 216 | 2 | 6 | 8 | 43 | 51 | 94 | 185 | 132 | 317 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1993 | 455 | 165 | 620 | 19 | 21 | 40 | 130 | 132 | 262 | 603 | 817 | 920 |
| 1993/94 பெரும்போகம் | 308 | 85 | 393 | 23 | 22 | 45 | 122 | 73 | 195 | 453 | 180 | 633 |
| 1994 சிறு போகம் | 136 | 64 | 200 | 8 | 35 | 43 | 62 | 38 | 100 | 207 | 136 | 343 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1994 | 444 | 149 | 593 | 31 | 57 | 88 | 184 | 111 | 295 | 660 | 316 | 976 |
| 1994/95 பெரும்போகம் | 516 | 182 | 698 | 18 | 18 | 36 | 37 | 22 | 59 | 571 | 222 | 793 |
| 1995 சிறு போகம்* | 167 | 78 | 245 | 9 | 40 | 49 | 60 | 36 | 96 | 236 | 154 | 390 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1995 | 683 | 260 | 943 | 27 | 58 | 85 | 97 | 58 | 155 | 807 | 376 | 1,183 |

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி.

* மீள் நிதியிடல் திட்டம் 1994 ஏப்பிறலில் புறக்கீடு செய்யப்பட்டு வட்டி உதவுதொகைத் திட்டத்தினால் பதிலிடப்பட்டது.

கொடுகடன் கொள்கையை ஒருங்கிணைத்தல் மற்றும் நெறிப்படுத்துதல், கடன் வழங்கும் வங்கிகளுக்கு வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் கடன் மீளளிப்பு, மற்றும் ஏனைய கிராமிய கொடுகடன் திட்டங்களின் கண்காணிப்பினையும் மேற்பார்வையினையும் தொடர்ந்தது. மத்திய வங்கியின் மீள்நிதியிடல் திட்டம் நிறுத்தப்பட்டமையானது மூலவளம் குறைந்த பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வேளாண்மைத் துறைக்கான அவற்றின் கடன் வழங்கலைக் கட்டுப்படுத்தியதெனினும், வர்த்தக வங்கிகள், சிறப்பாக இரு அரச வங்கிகளும் இத்துறைக்கான அவர்களின் கடன் வழங்கலை முன்னேற்றியமையானது பி. கி. அ. வங்கிகளின் குறைவடைந்த தொழிற்பாட்டினை எதிரீடு செய்வதாக இருந்தது. சரியான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டிருக்குமிடத்து கிராமியத் துறைக்குத் தேவையான நிதியினைக் கடன் வழங்கும் வங்கிகள் அவற்றின் சொந்த மூலவளங்களிலிருந்தே வழங்கக்கூடியனவாக இருந்தன என்பதை புதிய கொள்கை எடுத்துக்காட்டியது.

1994 இல் அரசினால் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகுதி 1995 இல் தொழிற்பாட்டிற்கு வந்ததுடன் அவ்வாண்டுப் பகுதியில் தொடர்ந்திருந்தது. மத்திய வங்கி அரசின் சார்பில் கடன் வழங்கும் வங்கிகளுக்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம் கடன் பதிவழித்தல் திட்டத்தினை ஒருங்கிணைத்துள்ளது. செலுத்தத் தவறிய முதல் தொகையில் 25 சதவீதத்தினைச் செலுத்தியதன் மூலம் கடன் வழங்கும் வங்கிகளினால் அவர்களின் கடந்தகாலத்தில் வரவேண்டிய கடன்கள் பதிவழிக்கப்பட்டதன் மூலம் ஏறத்தாழ 35,000 வேளாண்மையாளர் நிவாரணக் கடன் மீளளிப்பில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. மீளளிப்பு வீதங்கள் சாதாரண மட்டமான 75 - 85 சதவீதத்திலிருந்து ஆய்விற்குரிய ஆண்டில் 45 - 50 சதவீதம் கொண்ட மிகக்குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பல்வேறுபட்ட கொடுகடன் தொடர்களின் கீழ் பெறப்பட்ட மீள் நிதியிடல்களுடன் பங்கேற்கும்

கொடுகடன் நிறுவனங்களின் கடன் வழங்கல் தொழிற்பாடுகளுக்கு உதவி வழங்குவதன் மூலமாக 1995 இல் வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட கொடுகடன் திட்டங்கள் பலவற்றிற்கான நிறைவேற்று முகவராக மத்திய வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. மத்திய வங்கியின் சொந்த மீள்நிதியிடலினால் நிதியிடப்பட்ட திட்டங்களைப் போலன்றி, வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட இத்திட்டங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டில் முறையற்ற விதத்தில் தலையிட்டதாகக் கருதப்படவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களைப் பொறுத்தவரையில், கடன் வழங்கல் வீதமும் மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வீதமும் 2 சதவீதப் புள்ளிகளினால் ஆண்டிற்குமுறையே 14 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் குறைவடைந்தன. பொருளாதாரத்தில் வளர்ச்சியையும் தொழில் நிலையையும் மேம்படுத்துமொரு முயற்சியாக 1994 இன் பிற்பகுதியில் வேளாண்மை ஏற்மதிகள் மற்றும் கைத்தொழில் என்பனவற்றிற்கு இரு அரச வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் குறைக்கப்பட்டமையினால் உருவான ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கு வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய திருத்தம் தேவையாக இருந்தது.

### புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

1995 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் (புஅஉகிகொதி) வங்கிகள் அவற்றின் சொந்த நிதிகளிலிருந்து பகிர்ந்தளித்த கொடுகடனின் மொத்தப் பெறுமதி ரூ. 11,800 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் பகிர்ந்தளிப்பினைவிட 21 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மேலும், இவ்வாண்டில் புஅஉகிகொ செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 1994 இன் 58,836 இலிருந்து 1995 இல் 82,000 இற்கு அதிகரித்தது. குறிப்பிட்ட இவ்வாண்டில் புஅஉகிகொ திட்டத்தின் செயலாற்றத்தில் மிக்க கூடியளவு முன்னேற்றம் காணப்பட்டமைக்கு வேளாண்மையாளர்கள் அவர்களின் முன்னைய கடனைச் செலுத்தத் தவறியபோதும் 1994 இல் அரசினால் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகுதியின் கீழ் புதிய கடன்களைப் பெறுவதற்கு பலவேளாண்மையாளர் தகைமை பெற்றதே முக்கிய காரணமாகும். புஅஉகிகொ திட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 1994/95 பெரும்போகம் ரூ. 7,910 இலட்சத்திற்கு வகைகூறிய வேளையில் 1995 சிறுபோகம் மிகுதிக்கு வகைகூறியது. புஅஉகிகொ திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் பெரும் பங்கு நெற்செய்கைக்கானதாக அமைந்து 1995 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடனில் 70 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மிகுதி 30 சதவீதமும் துணை உணவுப் பயிர்ச்செய்கைக்கானதாகக் காணப்பட்டது.

1994 இல் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண்மைக் கடன்களுக்கான வட்டி உதவுதொகைத் திட்டம் எவ்வித மாற்றமுமின்றி 1995 இலும் தொடர்ந்தது. இவ்வசதியின் கீழ் வங்கிகள் வேளாணமையாளர்களுக்கு ஆண்டிற்கு 16 சதவீத வட்டியில் கடன்களை வழங்குவதனை இயலச் செய்யும் பொருட்டு 270 நாட்களைக் கொண்ட ஆகக் கூடிய காலப்பகுதிக்கு வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் தொகையின்மீது ஆண்டிற்கு 7.5 சதவீதம் கொண்ட வட்டி உதவுதொகையொன்று அரசினால் அவ் வங்கிகளுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டது. எனினும் நடைமுறையில், பல வேளாண்மையாளர்கள் அவர்களின் கடன்களை 270 நாட்களுக்கும் பார்க்க மிகக் குறைந்த காலத்திலேயே மீளச் செலுத்திவிட்டதுடன் வட்டி உதவுதொகை நிதியில் எடுப்பனவு செய்யப்பட்ட தொகை ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதனை விடக் குறைவாகவே இருந்தது. 1994 சிறுபோகத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன்களின் பேரில் 1995 இல் வங்கிகளுக்குச் செலுத்தப்பட்ட வட்டி உதவு தொகையின் மொத்தப் பெறுமதி ரூபா 140 இலட்சமாக அமைந்தது. 1994 இல் அறிவிக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தினை 1997 சிறுபோகம்வரை செலுத்தத்தவறும் வேளாண்மையர்களுக்கு விரிவாக்குவதற்கு அரசாங்கம் உடன்பட்டது. நிவாரணத் திட்டம் விரிவாக்கப்பட்டமையானது செலுத்த தவறிய கடன்களைக் கொண்டுள்ள வேளாண்மையாளர்கள் முதல் தொகையில் 25 சதவீதத்தினைச் செலுத்துவதன் பேரில் வங்கிகளினால் அக் கடன்கள் பதிவழிக்கப்பட்டதன் மூலம் கூடியளவு வேளாண்மையாளர்களுக்கு உதவியது. மேலும் கடன்பாட்டாளர்கள் நல்ல நிலையில் இருப்பதன் காரணமாக இது புதிய கடன்களை அவர்கள் பெறுவதற்கு தகைமையுடையதாக்கும். கொடுகடன் உத்தரவாதத்தின் முழுத் தொகையையும் பெற்றுக் கொள்வதற்குப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களைத் தகைமையுடையதாக்கும் சட்ட நடவடிக்கைகளின் தளர்த்தல்களுக்குத் தேவையான விதத்தில் மத்திய வங்கி அதன் கொடுகடன் உத்தரவாத ஒழுங்கு விதிகளை தளர்த்துமாறு அரசாங்கத்தின் நிவாரணத்தொகுதி வங்கியைக் கேட்டுள்ளது.

## அட்டவணை 10.10

### வைப்புக்களும் முற்பணங்களும் – கிராமியத்துறை*

(ப. இ. ரூபாய்களில்)

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள | | வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் | | பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 |
| 1 மொத்தச் சேமிப்புக்கள் ** ... | 6,359 | 7,173 | 366 | 471 | 1,481 | 615 | 1,736 | 1,996 |
| 1.1 சேமிப்புக்கள் ... | 5,552 | வி.கி. | வி.கி. | வி.கி. | 1,254 | 438 | 924 | 1,063 |
| 1.2 சிறப்புச் சேமிப்புக்கள் ... | – | வி.கி. | வி.கி. | வி.கி. | – | 55 | 683 | 786 |
| 1.3 நிலையான வைப்புக்கள் ... | 808 | வி.கி. | வி.கி. | வி.கி. | 228 | 122 | 128 | 147 |
| 2 வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் *** ... | 536 | 805 | 258 | 246 | 1,118 | 364 | 1,270 | 1,524 |
| 2.1 வேளாண்மை ... | 80 | 106 | 108 | 103 | 379 | 92 | 114 | 137 |
| 2.2 விலங்கு வளர்ப்பு ... | 18 | 28 | 2 | 2 | 25 | 6 | 28 | 34 |
| 2.3 மீன்பிடி ... | – | – | ... | ... | 29 | 1 | – | – |
| 2.4 சிறு கைத்தொழில் ... | 21 | 40 | 2 | 2 | 102 | 27 | 77 | 93 |
| 2.5 வீடமைப்பு, மின்னூட்டல் நீர் வழங்கல் ... | 261 | 385 | 13 | 12 | – | 31 | 112 | 134 |
| 2.6 செயற்றிட்ட/வர்த்தகம் ... | 74 | 104 | 88 | 84 | 216 | 60 | 683 | 820 |
| 2.7 ஏனையவை ... | 82 | 141 | 45 | 43 | 367 | 147 | 256 | 307 |

* கிராமியப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் கிளைகள் மீதான நிலைமைகள் நீக்கலாக.

** திசெம்பர் 31இல் சேமிப்புக்களின் மொத்தப் பெறுமதி.

*** இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி.

(அ) 1995 செத்தெம்பர் 30இல் உள்ளவாறான நிலைமை

(ஆ) நிறைவு செய்யப்படாத தரவுகள்

மூலங்கள் : மக்கள் வங்கி
இலங்கை வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள்.

இத்தளர்த்தலின் நியதிகளின்படி, வேளாண்மையாளர்களினால் 25 சதவீத கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள இழப்பின் முதல் தொகையில் 50 சதவீதத்தனை வங்கி பொறுப்பேற்றுக்கொள்ளும். பொதுவான கொடுகடன் உத்தரவாத ஒழுங்குவிதிகள் புஅஉகிகொ திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புதிய கடன்களுக்குப் பொருந்தும். கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நிருவகிக்கின்ற பொது நிபந்தனைகள் மேலும் தளர்த்தப்பட்டதனைக் காட்டும் விதத்தில், நிவாரணத் தொகுதியினால் மிக்க கடுமையாகப் பாதிக்கப்பட்ட பி. கி. அ. வங்கிகளுக்கு உதவுவதற்காக செலுத்தத் தவறிய கடன்களின் மீதான மதிப்பிடப்பட்ட மொத்தப் பொறுப்பில் 25 சதவீத முற்பணக் கொடுப்பனவை வங்கி மேற்கொண்டது. 1995 இறுதிவரை பிகிஅ வங்கிக்கான மொத்த முற்பணக் கொடுப்பனவு ரூ. 600 இலட்சமாக விளங்கியது.

மீளப் பெறப்படாத புஅஉகிகொ திட்டக் கடன்கள் தொடர்பாக கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் செலுத்தப்பட்ட வழமையான இழப்பீடு 1995 இல் ரூ. 60 இலட்சமாக விளங்கி இதுவரை செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டினை ஆண்டின் இறுதியில் ரூ. 1,440 இலட்சத்திற்கு உயர்த்தியது. அதனை புஅஉகிகொ திட்டத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் 1995 இறுதிவரை வங்கிகளினால் சேகரிக்கப்பட்ட ரூ. 280 இலட்சம் கொண்ட மொத்தக் கட்டணத்துடன் ஒப்பிடலாம்.

### பயிர்காப்புறுதித் திட்டங்கள்

1995 இல் பயிர்க் காப்புறுதி தீவு முழுவதற்குமான அடிப்படையில் வேளாண்மைக் காப்புறுதிச் சபையினாலும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரேதசங்களில் வரையறுக்கப்பட்ட சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியினாலும் வழங்கப்பட்டது. 1995 இல் வேளாண்மைக் காப்புறுதிச் சபையினால் அதன் திட்டங்களின்கீழ் காப்புறுதி செய்யபட்ட நெல் நிலத்தின் மொத்தப் பரப்பு 71,000 எக்டேயர்களாக விளங்கிய வேளையில் வரையறுக்கப்பட்ட சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் அத்தகைய நிலப்பரப்பு 349 எக்டேயர்களாக விளங்கியது. வேளாண்மைப் காப்புறுதிச்சபை ரூ. 250 இலட்சம் கொண்ட இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கெதிராக ரூ. 400 இலட்சம் கொண்ட காப்புறுதிக் கட்டணத்தைச் சேகரித்தது. ரூ. 2.5 இலட்சம் காப்புறுதிக் கட்டணத்தைச் சேகரித்த வரையறுக்கப்பட்ட சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி ரூ. 12 இலட்சம் கொண்ட இழப்பீட்டுத் தொகையை வழங்கியது. பயிர்க் காப்புறுதித் திட்டங்களின் அடிப்படைப் பண்பு யாதெனில் காப்புறுதி செய்யப்பட்ட நிலப்பரப்பும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் தொடர்ச்சியாக அதிகரித்திருப்பதேயாகும். வேளாண்மைக் காப்புறுதிச் சபை அதன் வரையறுக்கப்பட்ட மூலவளங்களின் நோக்கில் நாட்டின் முழுப் பயிர்க் காப்புறுதித் தேவைகளையும் வழங்க முடியாமலிருப்பதன் காரணமாக மிகச் சிறிதளவாக இருந்தபோதும், தனியார் பயிர் காப்புறுதி அறிமுகப் படுத்தப்பட்டமையானது மிகச் சிறந்ததொரு அபிவிருத்தியாக கருதப்படமுடியும். எனினும் வேளாண்மைக் காப்புறுதிச் சட்டங்கள் வேளாண்மைக் காப்புறுதியில் கிட்டத்தட்ட இறுதியான தனியுரிமையை வேளாண்மைக் காப்புறுதிச் சபைக்கு வழங்கியுள்ளதனால் தனிப்பட்ட காப்புறுதியாளர்களின் வழியிலுள்ள சட்டத்தடை நிலைகளை அவர்கள் வரவேற்கத் தக்களவிற்குத் தாண்டியுள்ளனர். இலங்கையில் பயிர்க் காப்புறுதி வியாபாரத்தினைத் தனியார் மயமாக்குவதற்கான தேவையின் நோக்கில், பயிர் காப்புறுதியை விருப்பத்திற்குரியதாக மாற்றுவதற்கேதுவாக வேளாண்மை காப்புறுதிச் சபையின் சட்டத்தைத் திருத்துவது அவசியமாகக் கருதப்படுவதுடன் தனியார் பயிர் காப்புறுதிப் பத்திரங்களைக் கடன்களுக்கான பிணையாக அரச துறை வங்கிகள் ஏற்றுக்கொள்வதற்கும் அனுமதிக்க வேண்டும்.

### கிராமியத்துறைக்கான கொடுகடன் வசதிகள்

1995 இல் இலங்கையின் கிராமியத் துறைக்கான கொடுகடன், முக்கியமாக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவு கிராமிய வங்கிகள், மக்கள் வங்கி வெளியிடக் கிளைகள், இலங்கை வங்கியின் வேளாண்மைப் பணிநிலையங்களிலுள்ள துணை அலுவலகங்கள், சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றினூடாக வழிப்படுத்தப்பட்டது. 1995 இல் இலங்கை வங்கி மற்றும் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு முறையே ரூ. 2,460 இலட்சமாகவும் ரூ. 15,250 இலட்சமாகவும் விளங்கின. இதனை முன்னைய ஆண்டில் குறிப்பிட்ட நிறுவனங்களினால் கிராமியத்துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ. 2,580 இலட்சம் மற்றும் ரூ. 12,700 இலட்சத்துடன் ஒப்பிடலாம்.

### கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுதல்

பொருளாதாரத்தில் கிராமியத்துறை முக்கியமானதொன்றாக உள்ளமையினால், கிராமிய

சேமிப்புக்களைத் திரட்டல் முதலீட்டிற்கான மூலவளங்களின் குறிப்பிடத்தக்க பாய்ச்சலை உருவாக்கும். இதனால், கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுவதற்கான பயன்மிக்க வழிமுறைகள் ஆற்றல் மிக்க கிராமிய நிதியியல் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்கான எந்த ஒரு உத்தியிலும் முக்கியமானதொரு கூறாக உள்ளடக்கப்படவேண்டும். இலங்கையில் கிராமியத் துறையின் சேமிப்புக்கள் முக்கியமாக கூட்டுறவு கிராமிய வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றினால் திரட்டப்பட்டன. பிரதேச கிராமிய அபிவருத்தி வங்கி நீங்கலாக, கிராமியத்துறையினால் திரட்டப்பட்ட மொத்த சேமிப்புக்கள் 1994 இறுதியின் ரூ. 8.5 பில்லியனினுடன் ஒப்பிடுகையில் 1995 இறுதியில் ரூ. 9.6 பில்லியனாக விளங்கி 11.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது.

### 10.9. ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

#### சேமிப்பு நிறுவனங்கள்

1995 இல் நாட்டின் முதன்மைச் சேமிப்பு நிறுவனமான தேசிய சேமிப்பு வங்கி அதன் வைப்புத் தளத்தினைத் தொடர்ந்தும் விரிவாக்கியது. இவ்விரிவாக்கம் 1994 இலும் பார்க்க மிகக் குறைந்த வேகத்தில் காணப்பட்டமைக்கு சந்தையில் எங்கேயும் வட்டி வீதங்களை உயர்த்துவதில் தாமதித்த ஈடுபாடு காணப்பட்டமையே காரணமாகும். மொத்த வைப்புக்கள் முன்னைய ஆண்டின் 17 சதவீதம் (ரூ. 111,690 இலட்சம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 577,560 இலட்சத்திற்கு 8 சதவீதத்தினால் (ரூ. 44,300 இலட்சம்) உயர்வடைந்தது. வைப்புத் தளத்தில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் நிலையான வைப்புக்களின் அதிகரிப்புக்கள் 77 சதவீதத்திற்கும் (ரூ. 34,140 இலட்சம்) சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு 22 சதவீதத்திற்கும் (ரூ. 9,750 இலட்சம்) வகைகூறின. அதேவேளை தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பரிசூதியச் சேமிப்பு முறிகள் என்பனவற்றின் கீழான வைப்புக்கள் இவ்வாண்டில் ஓரளவு அதிகரிப்பினைக் காட்டின.

ஆண்டின் தொடக்கத்தில் 2 சதவீதப் புள்ளிகளினால் 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்கள் மீதான வட்டிவீதங்கள் ஆண்டு முழுவதும் அதே மட்டத்திலேயே காணப்பட்டன. வீழ்ச்சியடைந்துசெல்லும் சந்தை வீதங்களுக்கு இணைவாக, 1994 திசெம்பரில் 16 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ள 12 மாத நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வீதமானது வேறு வட்டிவீதங்கள் குறிப்பாக திறைசேரி உண்டியல்கள் மீதானவை உயர்வடைந்தபோதும் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் இதே மட்டத்திலேயே காணப்பட்டது. எனினும் தாமதமாகவேனும் திறைசேரி உண்டியல் சந்தையில் உயர்ந்து செல்லும் வட்டிவீதங்களைக் கவனத்திற்கொண்டு ஓராண்டு நிலையான வைப்புக்கள் மீதான வட்டிவீதம் 1995 செத்தெம்பரில் 14 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டதுடன் 1995 திசெம்பரில் 16 சதவீதத்திற்குமேலும் அதிகரிக்கப்பட்டது. மாதாந்தம் வட்டி செலுத்தப்படும் ஓராண்டு வைப்புக்கள் தொடர்பான வட்டிவீதமும் செத்தெம்பரில் 13.2 சதவீதத்திலிருந்து 13.8 சதவீதத்திற்கும் 1995 திசெம்பரில் 14.4 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.

மொத்த முதலீடுகள் ஆண்டின் இறுதியில் ரூ. 525,350 இலட்சத்திற்கு 84 சதவீதத்தினால் (ரூ. 40,910 இலட்சம்) அதிகரித்தன. ரூபாப் பிணைகள் மற்றும் தொகுதிக்கடன்கள் மீதான முதலீடுகள் முறையே 13.5 சதவீதத்தினாலும் (ரூ. 41,550 இலட்சம்) 143 சதவீதத்தினாலும் (ரூ. 18,400 இலட்சம்) அதிகரித்த வேளையில் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள் 1995 இல் 12.5 சதவீதத்தினால் (ரூ. 16,790 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன.

1995 இல் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நடவடிக்கைகள் சிறிதளவு விரிவடைந்தன. இவ்வாண்டில் நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் 1994 இன் ரூ. 14,570 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 15,000 இலட்சமாக விளங்கியது. உறுப்பினர் நிலுவைகளின் மொத்த வெளிநின்ற பெறுமதி ரூ. 123,150 இலட்சத்திற்கு 23.9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஊழியர் நம்பிக்கை நிதிய மூலவளத்தில் பெருந்தொகை அரச பிணைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மொத்த முதலீடுகளில் அரச பிணைகளிலுள்ள முதலீடுகள் முன்னைய ஆண்டின் பதிவு செய்யப்பட்ட 62 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 66 சதவீதத்திற்கு வகைகூறின. நிதியத்தினால் செய்யப்பட்ட பங்குடமை முதலீடுகள் 1995 இறுதியில் ரூ. 13,640 இலட்சத்திற்கு 17.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

தற்காலிக தரவுகளின்படி, 1995 திசெம்பரில் ஊழியர் சேம நிதியத்தின் மொத்த ஊழியர் நிலுவை ரூ. 82 பில்லியனுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தது. நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் 1994 இன் ரூ. 7.4 பில்லியனிலிருந்து 1995 இல் ரூ.

## அட்டவணை 10.11

### நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் வழங்கப்பட்டதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு (பத்து இலட்சம் ரூபாய்களில்)

| நோக்கம் | இ.அ.நி.கூ. | | தே.சே.வ. | | அ.ஈ.மு.வ. | | தே.அ.வ. (2) | | வீஅ.நி.கூ. | | தே. வீ. அ. மே. | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தக் கடன்களின் % | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 | 1994 | 1995 |
| 1. வேளாண்மை | 308 | 433 | 324 | 651 | - | - | 12 | 25 | - | - | - | - | 644 | 1,109 | 4.4 | 5.7 |
| 2. கைத்தொழில் | 2,718 | 3,560 | 2,510 | 3,437 | - | - | - | - | - | - | - | - | 5,228 | 6,997 | 35'9 | 36'2 |
| 3. சுற்றுலா | 694 | 1,056 | 505 | 1,117 | - | - | - | - | - | - | - | - | 1,199 | 2,173 | 8.2 | 11.3 |
| 4. வர்த்தகம் | - | - | 1,312 | - | - | - | - | - | - | - | - | - | 1,312 | 0 | 9.0 | 0.0 |
| 5. நிதி | 181 | 434 | 70 | 70 | 470 | 1,600 | - | - | - | - | - | - | 721 | 2,104 | 5.0 | 10.9 |
| 6. வீடமைப்பு | - | - | - | 91 | 236 | 239 | 670 | 819 | 291 | 555 | 547 | 875 | 1,744 | 2,579 | 12.0 | 13.4 |
| 7. கடன் மீட்பு | - | - | - | - | - | - | 11 | 11 | - | - | - | - | 11 | 11 | 0.1 | 0.1 |
| 8. ஏனைய கடன்கள | 657 | 415 | 979 | 1,153 | 2,028 | 2,748 | 31 | 20 | - | - | - | - | 3,695 | 4,336 | 25.4 | 22.5 |
| மொத்தம் (ஒப்புதலளிக்கப்பட்டவை) | 4,558 | 5,898 | 5,700 | 6,519 | 2,735 | 4,587 | 724 | 875 | 291 | 555 | 547 | 875 | 14,554 | 19,309 | 100 | 100 |
| வழங்கப்பட்ட கடன்கள் (2) | 2,758 | 3,687 | 5,418 | 4,011 | 2,734 | 4,587 | 635 | 738 | 255 | 469 | 454 | 373 | 12,244 | 9,854 | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த கடன்களில் வழங்கப்பட்ட கடனின் % | | | | | | | | | | | | | 84 | 51 | | |

மூலங்கள் : இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (இ. அ. நி. கூ.)
தேசிய சேமிப்பு வங்கி (தே. சே. வ.)
அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ.)
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வீ. அ. நி. கூ.)
தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ.)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை (தே. வீ. அ. மே)

குறிப்பு (1) முன்னைய ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்டு ஆய்விற்குரிய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.
(2) மீள் நிதியிடல் கடன்களையும் ஒப்புரவு முதலீடுகளையும் உள்ளடக்கும்.

8.2 பில்லியனுக்கு விரிவடைந்தது. உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நன்மைகள் (ரூ. 2.7 பில்லியன்) நீங்கலாக இவ்உதவுதொகைகளின் முதலீடும், ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்தான வருமானமும் 1995 இறுதியில் ரூ. 100 பில்லியனுக்கு ரூ. 19 பில்லியனால் உயர்வடைந்தது. இது உள்நாட்டுச் சந்தையில் தனிப்பெரும் முதலீட்டாளராக ஊழியர் சேமநிதியை மாற்றியுள்ளது.

### நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள்

1995 இல் வரையறுக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அதன் நீண்டகால கடன் வழங்கல் நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1994 இன் 678 இலிருந்து 1995 இல் 1,248 இற்கு கணிசமாக அதிகரித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கையில் 527 கடன்கள் கைத்தொழில் துறைக்கானதாகவும் 341 கடன்கள் வேளாண்மைத் துறைக்கானதாகவும், 268 கடன்கள் சுற்றுலாத் துறைக்கானதாகவும் இருந்தன. ஆண்டின் இறுதியில் கடன்களின் மொத்த வெளிநின்ற பெறுமதி முன்னைய ஆண்டின் இறுதியிலிருந்த ரூ. 72,230 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 91,840 இலட்சமாக விளங்கியது. வரையறுக்கப்பட்ட இஅநி கூட்டுத்தாபனத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 27,480 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 26,870 இலட்சமாக விளங்கியது. இக்காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களில் பெருந்தொகை கைத்தொழில் நோக்கங்களுக்கானதாக இருந்தவேளையில் ரூ. 7,240 இலட்சம் (26 சதவீதம்) சுற்றுலா விடுதிகளின் கட்டுமானத்திற்காக சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்டது. வேளாண்மைத்துறையும் (ரூ. 2,690 இலட்சம்) நிதியியல் துறையும் (ரூ. 3,510 இலட்சம்) இவ்வாண்டில் கொடுகடனைப் பெற்ற ஏனைய முக்கிய துறைகளாக

அட்டவணை 10.12

பதிவு செய்யப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்களின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடும்

(ரூபா பத்து இலட்சங்களில்)

| விடயம் | 1994 செத்தெம்பர் 30 இல் உள்ளவாறு | 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 1995 மாச்சு 31 இல் உள்ளவாறு | 1995 யூன் 30 இல் உள்ளவாறு | 1995 செத்தெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| **மூலங்கள்** | | | | | |
| 1. மூலதனக் கணக்கு | 1,833 | 2,184 | 2,160 | 2,051 | 2,135 |
| 2. வைப்புக்கள் | 6,525 | 6,788 | 7,129 | 7,341 | 7,403 |
| 3. கடன்பாடுகள் | 1,235 | 1,335 | 1,470 | 1,718 | 2,061 |
| 4. ஏனைய பொறுப்புக்கள் | 1,479 | 1,566 | 1,848 | 2,031 | 2,093 |
| மொத்தம் | 11,073 | 11,874 | 12,607 | 13,140 | 13,691 |
| **பயன்பாடு** | | | | | |
| 1. வாடகைக் கொள்வனவு வியாபாரம் | 2,172 | 2,219 | 2,235 | 2,187 | 2,247 |
| 2. வெளிநிற்கும் கடன்கள் | 3,893 | 4,273 | 5,020 | 5,468 | 5,926 |
| 3. முதலீடுகள் | 1,717 | 1,865 | 1,865 | 1,903 | 1,911 |
| 4. ஏனைய சொத்துக்கள் | 3,290 | 3,517 | 3,487 | 3,582 | 3,606 |
| மொத்தம் | 11,073 | 11,874 | 12,607 | 13,140 | 13,691 |
| மத்திய வங்கிக்கு அறிக்கையிட்ட நிதிக் கூட்டு நிலையங்கள் | 24 | 24 | 24 | 24 | 21 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

விளங்கின. இ. அ. நி. கூட்டுத்தாபனம் 20 கம்பனிகளுக்கு ரூ. 3,610 இலட்சத்தினைப் பங்குடமை நிதியாக வழங்கியது. பங்குடமை நிதி வசதிகளாக ரூ. 1,420 இலட்சம், மற்றும் ரூ. 1,110 இலட்சம் கொண்ட தொகைகள் நிதித்துறையிலுள்ள ஒன்பது கம்பனிகளுக்கும், தயாரிப்புத்துறையிலுள்ள எட்டுக் கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இ. அ. நி. கூட்டுத்தாபனத்தினது நிதியின் முக்கிய மூலங்களாக வாடிக்கையாளரின் கடன் மீள் கொடுப்பனவுகள், தொகுதிக் கடன்களின் வழங்கல், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிலிருந்தான கடன்பாடுகள் என்பன காணப்பட்டன. ரூ. 24,710 இலட்சம் கொண்டதொரு தொகை தொகுதிக்கடன்களின் வழங்கலூடாகப் பெறப்பட்ட வேளையில் ரூ. 24,810 இலட்சம், ரூ. 11,470 இலட்சம் கொண்ட தொகைகள் முறையே கடன்களின் மீளளிப்புக்களுக்காகவும் ப. அ. அமைப்பு மற்றும் ஆ. அ. வங்கி என்பனவற்றிலிருந்தான கடன்களாகவும் பெறப்பட்டன.

1995 இல் தேசிய அபிவிருத்தி வங்கியும் அதன் நடவடிக்கைகளை விரிவாக்கிக்கொண்டது. தேசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1995 இறுதியில் ரூ. 65,190 இலட்சத்திற்கு 20.3 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்தக் கடன் ஒப்புதல்களில் 52.7 சதவீதம் (ரூ. 34,370 இலட்சம்) கைத்தொழில் துறைக்கானதாக விருந்ததுடன் இத்துறைக்கான கடன் ஒப்புதல்களின் மொத்த எண்ணிக்கை 258 ஆகவும் காணப்பட்டது. அதேவேளை, ரூ. 11,170 இலட்சம் மற்றும் ரூ. 11,530 இலட்சம் கொண்ட தொகைகள் முறையே சுற்றுலாத்துறைக்கும் சொத்து அபிவிருத்தித் துறைக்கும் ஒப்புதலளிக்கப் பட்டன. தேசிய அபிவிருத்தி வங்கியும் கைத்தொழில் சுற்றுலா மற்றும் நிதியியல் துறைகளிலுள்ள 10 கம்பனிகளுக்கு மொத்தமாக ரூ. 4,770 இலட்சத்தினைப் பங்குடமை நிதி வசதியாக வழங்கியுள்ளது. மொத்தப் பங்குடமை நிதியிடலில் ரூ. 2,490 இலட்சம் சுற்றுலாத்துறையிலுள்ள மூன்று கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட வேளையில் ரூ. 1980 இலட்சம் கைத்தொழில் துறையிலுள்ள ஆறு கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. நிதியின் முக்கிய மூலங்களாக கடன்களின் மீளளிப்புக்கள் (ரூ. 34,140 இலட்சம்) மத்திய வங்கி மீள்நிதியிடல் திட்டத்தின் கீழான கடன்பாடுகள் (ரூ. 18,150 இலட்சம்) வெளிநாட்டிலிருந்தான கடன்பாடுகள் (ரூ. 2,220 இலட்சம்) என்பன விளங்கின.

கடந்த காலத்தினைப் போன்றே, அரச ஈட்டு முதலீட்டு வங்கி முக்கியமாக வீடமைப்பு நோக்கங்களுக்கான நீண்டகாலக் கடன் வழங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை

4,862 ஆகவும் பெறுமதி ரூ. 8,750 இலட்சமாகவும் காணப்பட்டது. வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பகுதி வீடமைப்பு நோக்கங்களுக்கானதாக இருந்தது. தற்காலிகத் தரவுகளின்படி, இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் எண்ணிக்கை 4,567 ஆகவும், பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 8,870 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 8,180 இலட்சமாகவும் காணப்பட்டது. 1995 இல் ஒப்புதலளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் மொத்தப் பெறுமதியில் ரூ. 2,940 இலட்சம் ஆ. அ. வங்கி மற்றும் ஐ. நா. அ. முகவர் நிதியம் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் குறைந்த வருமான முடையோர் வீடமைப்பு செயற்றிட்டம் தொடர்பானதாக இருந்தது. இக்காலப்பகுதியில் அ. ஈ. மு. வங்கி வேளாண்மை நிலங்கள், பொறிகள் மற்றும் உழுபொறிகள் என்பனவற்றின் கொள்வனவினை உள்ளடக்கிய வேளாண்மை நோக்கங்களுக்காக ரூ. 250 இலட்சம் பெறுமதி கொண்ட கடன்களுக்கு ஒப்புதலளித்தது. அதேவேளை இவ்வாண்டில் ரூ. 7,380 இலட்சம் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. 1995 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 6,870 இலட்சமாக இருந்தது. 1995 இல் அ. ஈ. மு. வங்கியிலிருந்து நிதியின் முக்கிய மூலங்களாக நிலையான வைப்புக்கள் (ரூ. 10,670 இலட்சம்) கடன்களின் மீளளிப்புக்கள் (ரூ. 9,800 இலட்சம்) தொகுதிக் கடன்களின் வெளியீடு ரூ. 5,000 இலட்சம்) ஆ. அ. வங்கி மற்றும் ஐ. நா. அ. மு. நிதியக் கடன்கள் (ரூ. 760 இலட்சம்) என்பன காணப்பட்டன.

அட்டவணை 10.13

**வணிக வங்கிகளின் நடவைக்கைகளின் முன்னேற்றம் 1994 - 1995**

(ரூபா பத்து இலட்சம்)

| | 1994 | 1995 |
|---|---|---|
| 1 குத்தகையின் மீது பெறப்பட்ட வருவாய் | 293 | 450 |
| 2. வர்த்தக உண்டியல்களின் கழிவின் மீது வட்டி | 281 | 321 |
| 3. நிதி மற்றும் சந்தைப்படுத்தல் ஆலோசனை | 9 | 37 |
| 4. காப்புப் பொறுப்பேற்புத் தரகுகள் | 18 | 23 |
| 5. காப்புறுதி தரகுகள் | 2 | 2 |
| 6. விளிம்பு வர்த்தகத்தின் மீதான வட்டி | 71 | 116 |
| 7. பங்குகளின் முதலீட்டின் மீதான இலாபம் | 144 | 60 |
| 8. திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டி | 31 | 94 |
| 9. ஏனைய வருமானம் | 366 | 586 |
| மொத்த வருமானம் | 1,215 | 1,689 |

* தற்காலிகமானவை மூலம் இலங்கை மத்திய வங்கி

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டும் வீடமைப்பு நோக்கங்களுக்கான கொடுகடனின் மீது தமது கடன் வழங்கல் நடவடிக்கைகளைச் செறிவாக்கின. 1995 இல் தே. வீ. அ. மேலாண்மைச் சபை ரூ. 8,750 இலட்சம் பெறுமதி கொண்ட 26,851 கடன்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இதில் ரூ. 3,730 இலட்சம் இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனை முன்னைய ஆண்டின் ரூ. 5,470 இலட்சம் பெறுமதிகொண்ட கடன்களின் ஒப்புதல்களுடனும் ரூ. 4,540 இலட்சம் பகிர்ந்தளிப்புக்களுடனும் ஒப்பிடலாம். வீ. அ. நி. கூட்டுத்தாபனம் 1994 இன் ரூ. 2,910 இலட்சம் கொண்ட மொத்தக் கடன்கள் மற்றும் ரூ. 2,550 இலட்சம் கொண்ட மொத்த பகிர்ந்தளிப்புக்கள் என்பனவற்றிற் கெதிராக 1995 இல் ரூ. 5,550 இலட்சத்திற்கு ஒப்புதலளித்த வேளையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் ரூ. 4,690 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

## நிதிக் கூட்டு நிலையங்கள்

மத்திய வங்கியின் உரிமம் பெற்ற நிதிக்கூட்டு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1995 காலப்பகுதியில் தொடர்ந்தும் 24 ஆக விளங்கியது. நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த மூலவளங்கள் (சொத்துக்கள்/பொறுப்புக்கள்) 1995 செத்தெம்பர் இறுதியில் ரூ. 136,910 இலட்சமாக விளங்கி, 1994 செத்தெம்பரைவிட ரூ. 26,180 இலட்சங்கொண்ட (23.6 சதவீதம்) அதிகரிப்பைப் பதிவு செய்தன. நிதிக்கூட்டு நிலையங்களில் முதலீட்டாளர் நம்பிக்கை பெருமளவுக்கு மீள நிறுவப்பட்டிருந்தது. 1994 இல் ஏற்பட்ட வளர்ச்சியைத் தொடர்ந்து மொத்தச் சொத்தக்கள்/பொறுப்புக்கள் 31.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையால் 1995 இலும் வளர்ச்சியேற்பட்டது. பங்குச் சந்தையின் தற்போதைய வீழ்ச்சியும் நிதிக்கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான வட்டிவீதங்களுமே இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாகும்.

1994 இல் காணப்பட்ட இதே போக்கைப் பிரதிபலிக்கும் வகையில், குத்தகை நிதியிடல் ரூ. 18,760 இலட்சத்தால் (60.7 சதவீதம்) ரூ. 49,660 இலட்சத்துக்கு ஏற்பட்ட அதிகரிப்புடன் வெளிநிற்கும் மொத்தக் கடன்கள் ரூ. 20,330 இலட்சங்கொண்ட (52.2 சதவீதம்) குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைக்காட்டின. 1995 செத்தெம்பருடன் முடிவடைந்த ஆண்டில் வாடகைக் கொள்வனவு நிதியிடல் முன்னைய காலப்பகுதியின் ரூ. 310

இலட்சங்கொண்ட அதிகரிப்புக்கெதிராக ரூ. 750 இலட்சத்தால் விரிவடைந்தது. அதே வேளையில் அரச பிணைகளில் முதலீடுகளையும் துணைக் கம்பனிகள், இணைக் கம்பனிகள், மூலக்கம்பனிகள் ஆகியவற்றிலுள்ள முதலீடுகளையும் ஏனைய முதலீடுகளையும் உள்ளடக்கிய முதலீடுகள் ரூ. 1,940 இலட்சத்தால் அதிகரித்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், நிதிக்கூட்டு நிலையங்களின் மூலதனமும் ஒதுக்குகளும் ரூ. 3,020 இலட்சத்தால் (16.5 சதவீதம்) அதிகரித்தன. நிதிக்கூட்டு நிலையங்களுடனான வைப்புக்கள் 8,780 இலட்சத்தால் (13.5 சதவீதம்) அதிகரித்து 1995 செத்தெம்பர் இறுதியில் ரூ. 74,030 இலட்சமாக விளங்கின. வர்த்தக வங்கிகள், பங்குதாரர்கள், பணிப்பாளர்களிடமிருந்தான கடன்கள் ஏனைய கடன்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கடன்பாடுகள் அக்காலப்பகுதியில் ரூ. 8,260 இலட்சத்தால் (66.8 சதவீதம்) அதிகரித்தன. வர்த்தக வங்கிகளிடமிருந்தான கடன்பாடுகள் 80.7 சதவீதத்தால் (ரூ. 5,300 இலட்சம்) வளர்ச்சியடைந்தன.

நலிவுற்ற நிதிக்கூட்டு நிலையங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. 1995 காலப்பகுதியில் ரூ. 1,690 இலட்சம் கொண்ட தேறிய தொகையொன்று வழங்கப்பட்டதுடன் இது 1994 இல் வழங்கப்பட்ட தொகையாகிய ரூ. 2,590 இலட்சத்தினைவிடக் குறைவான தொகை யொன்றாகும். அதன்படி மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வெளிநிற்கும் மீள்நிதியிடல் வசதிகள் ரூ. 23,040 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 24,730 இலட்சத்துக்கு அதிகரித்தன.

## 10.10. சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்

### வணிக வங்கித் தொழில்

1995 இல் வணிக வங்கிகளின் மொத்த வருவாய் ரூ. 16,240 இலட்சத்திற்கு 58.6 சதவீதத்தினால் (ரூ. 9,960 இலட்சம்) அதிகரித்தது. கைத்தொழிலின் அதிகரித்த வருவாய்க்கு குத்தகையிலிருந்தான வருவாய்கள் (ரூ. 3,200 இலட்சம்) முன்னேற்றம் கண்டமையும் வர்த்தக உண்டியல்களின் கழிவிடலும் (ரூ. 1,960 இலட்சம்) முக்கிய காரணங்களாகும். ஆண்டிறுதியில் மொத்தச் சொத்துக்கள் ரூ. 120,010 இலட்சத்திற்கு 132 சதவீதத்தினால் அதிகரித்தன.

### குத்தகைக் கூட்டுநிலையங்கள்

1994 இனைப் போன்றே மூன்று கூட்டு நிலையங்கள் காணப்பட்டன. அவையாவன வரையறுக்கப்பட்ட லங்கா ஒறிக்ஸ் கூட்டுநிலையம், வரையறுக்கப்பட்ட கொமர்சல் குத்தகைக் கூட்டுநிலையம், மற்றும் வரையறுக்கப்பட்ட மெர்க்கன்டைல் குத்தகைக் கூட்டுநிலையம் என்பனவாம். இவை, 1995 இல் முக்கியமாக குத்தகை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இக்கூட்டுநிலையங்களின் மொத்தச் சொத்தக்கள் 1994 இறுதியின் ரூ. 29,560 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 36,310 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. கூட்டுநிலையங்களினால் வழங்கப்பட்ட மொத்த குத்தகை நிதி 1995 இறுதியில் ரூ. 22,130 இலட்சத்திற்கு ரூ. 2,950 இலட்சத்தினால் வளர்ச்சியடைந்தது.

கருவிகளின் வகைப்படியான குத்தகை நிதி நியதிகளில், மொத்தக் குத்தகை நிதியில் 57 சதவீதம் வர்த்தக ஊர்திகளுக்கானவையாக இருந்தன. அதேவேளை துறைவாரியான அடிப்படையில் வர்த்தகத்துறை குத்தகை நிதியில் 47 சதவீதத்தினைப் பெற்றவேளையில் கைத்தொழில்துறை 18 சதவீதத்தினைப் பெற்றுள்ளது.

### தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்கள்

தொழில் முயற்சி மூலதனக் கூட்டுநிலையங்களின் நடவடிக்கைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து விரிவடைந்தன. தற்காலிகத் தரவுகளின்படி துணிகர தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்களின் மொத்த மூலவள அடிப்படை 1994 இன் ரூ. 9,900 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 14,460 இலட்சத்திற்கு அதிகரித்தது. துணிகர தொழில் முயற்சி மூலதனக் கூட்டுநிலையங்களினால் செயற்றிட்ட பங்குடைமைகளில் செய்யப்பட்ட முதலீடுகள் 1994 இன் ரூ. 4,350 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 5,890 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. மொத்த முதலீட்டில் 63 சதவீதம் புதிய தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டவேளையில் 31 சதவீதம் ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களின் விரிவாக்கத்திற்கானதாக இருந்தது. முதலீட்டில் பெரும்பகுதி 62 சதவீதம் அல்லது ரூ. 3,650 இலட்சம் தயாரிப்புத்துறையில் காணப்பட்டவேளையில் மொத்த முதலீட்டில் 30 சதவீதமும் 8 சதவீதமும் முறையே பணிகள் துறையிலும் வேளாண்மைத்துறையிலும் காணப்பட்டன.

### காப்புறுதிக் கூட்டுநிலையங்கள்

1994 இனைப் போன்றே 1995 இலும் ஆறு காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் தொழிற்பாடுகளை மேற்கொண்டன. இவற்றில் ஐந்து ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டையும் மேற்கொண்ட வேளையில் ஒன்று அதன் நடவடிக்கைகளை ஆயுள்காப்புறுதிக்கு மட்டுப்படுத்திக்கொண்டது. இந்நிறுவனங்களின் அதிகரித்த சந்தைப்படுத்தல் நடவடிக்கை, மற்றும் காப்புறுதிப் பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்ளுவதன் நன்மைகள் பற்றிய அறிவாற்றல் வளர்ந்து செல்கின்றமை என்பனவற்றின் விளைவாக, அண்மைய ஆண்டுகளில் காப்புறுதிக் கைத்தொழில் வளர்ந்து வருகின்றது. இப்போக்கு,

ஆயுள் காப்புறுதி நடவடிக்கை, அதே போன்று தீ, விபத்து, கப்பற் சரக்கு, உந்து காப்புறுதி என்பனவற்றை உள்ளடக்கிய பொதுக்காப்புறுதி நடவடிக்கை என்பன விரிவடைந்தமையின் காரணமாக 1995 இலும் தொடாந்து காணப்பட்டது.

1995 இல் சேகரிக்கப்பட்ட ஆண்டு ஆயுள் காப்புறுதிக் கட்டணம் ரூ. 28,160 இலட்சத்திற்கு 38 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. காப்புறுதிக் கூட்டுநிலையங்களின் ஆயுள் காப்புறுதிகளின் மொத்தப் பெறுமதி 1994 இறுதியின் ரூ. 67,490 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 85,980 இலட்சத்திற்கு உயர்வடைந்தவேளையில், நடைமுறையிலுள்ள ஆயுள்காப்புறுதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 558,000 இலிருந்து 723,000 இற்கு உயர்வடைந்தது.

1995 இல் பொதுக்காப்புறுதி நிதியின் பேரிலான தேறிய காப்புறுதிக் கட்டணம் ரூ. 28,340 இலட்சத்திற்கு 26 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பொதுக்காப்புறுதி வகையில் மிகப்பெரும் துறையாகவுள்ள உந்து காப்புறுதித்துறையில் தேறிய காப்புறுதிக் கட்டணம் 1994 இன் ரூ. 11,950 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 14,600 இலட்சத்திற்கு அதிகரித்தது. தீ அபாய காப்புறுதி, விபத்துக்காப்புறுதி மற்றும் கப்பற் சரக்கு காப்புறுதி என்பனவற்றின் தேறிய காப்புறுதிக் கட்டணங்களும் முறையே 12 சதவீதத்தினாலும் (ரூ. 290 இலட்சம்) 28 சதவீதத்தினாலும் (ரூ. 1,750 இலட்சம்) 67 சதவீதத்தினாலும் (ரூ. 1,240 இலட்சம்) உயர்வடைந்தன.

## 10.11. பணச்சந்தை

### பொதுவான போக்குகள்

நிதித்துறையின் தொடர்ச்சியான அபிவிருத்தியுடன் 1995 இல் பணச்சந்தை நடவடிக்கை விரிவடைந்தது. ஆண்டின் பின்னரைப்பகுதியில் திரவத் தன்மையில் காணப்பட்ட பொதுவான குறைப்புக்கு இட்டுச்சென்ற விரிவடைந்த இறைக்குறை, வெளிநாட்டிலிருந்தான உட்பாய்ச்சல்களின் குறைப்புப் போன்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் பணச்சந்தையின் மீது எதிர்விளைவுகளைக் கொண்டிருந்தன. வாராந்த திறைசேரி உண்டியல் ஏலங்களில் தீர்மானிக்கப்பட்ட விளைவு வீதங்கள், ஏனைய வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் அடையாள வீதங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டன. சனவரியில் முதிர்ச்சியடைந்து மீள வழங்கப்படாத திறைசேரி உண்டியல்களுடன் ஆண்டின் முற்பகுதியில் திரவத்தன்மை அதிகரித்தமை, திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்கள் முதற் காலாண்டில் வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. எவ்வாறாயினும், அரசினது அதிகரித்த கடன்பாடுகளும் குறைந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களும் சந்தையில் திரவத்தன்மைக் குறைப்புக்கு இட்டுச் சென்றன. இதன் விளைவாக வட்டி வீதங்களிலும் அதிகரிப்பொன்று ஏற்பட்டது. திரவத் தன்மைக் குறைவானது சிறப்பாக குறுங்காலச் சந்தையில் கடைசிக் காலாண்டில் மிகக் கடுமையாகக் காணப்பட்டதும் அழைப்புச் சந்தை வீதங்களையும் முன்னெப்போதுமில்லாத உயர்மட்டங்களுக்கு உயர்த்தியது. மத்திய வங்கியானது சந்தையில் திரவத்தன்மையை அதிகரிக்கச் செய்து அதன் மூலம் வட்டிவீதங்களிலேற்பட்ட அதிகரிப்பைக் குறைக்குமுகமாக நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி என்ற பெயரில் புதிய வசதியொன்றை அறிமுகப்படுத்தியது.

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை

கடந்த இரு ஆண்டுகளிலும் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, அழைப்புச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் அளவுகள் உயர்வாயிருந்தன. சில வர்த்தக வங்கிகளும் வங்கியல்லா நிதி நிறுவனங்களும் தமது குறுங்கால நடுத்தரகால தொழிற்பாடுகளுக்கான நிதியங்களை பெற்றுக்கொள்வதற்கு அழைப்புச் சந்தையை நாடியமையினால் ஆண்டுப் புரழ்வு 40 சதவீதத்தினால் (ரூ. 654 பில்லியன்) அதிகரித்தது. 1994 இறுதியிலிருந்த 20.00 - 23.00 சதவீத வீச்சிலிருந்து 1995 மே இறுதியில் 15.00 - 16.00 சதவீத வீச்சுக்கு ஏற்பட்ட ஆரம்ப வீழ்ச்சியைத் தொடர்ந்து வீதங்கள் மேல் நோக்கி அசையத் தொடங்கி யூலை நடுப்பகுதியில் 40.00 - 65.00 சதவீத வீச்சுக்கு அதிகரித்தன. அதன்பின் வீதங்கள் ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்தபோதிலும் கடைசிக் காலாண்டில் அவை மீண்டும் கடுமையாக அதிகரித்தன. திசெம்பர் தொடக்கத்தில் இவ்வீதங்கள் ஒருபோதும் காணப்படாத வீதங்களுக்கு அதிகரித்ததுடன் திசெம்பர் 7 ஆம் நாளன்று 102 சதவீத உச்சமட்டத்தை எய்தியது. ஆண்டு இறுதி மட்டமானது 20 - 58.00 சதவீத வீச்சில் உயர்வானதாகவே காணப்பட்டபோதிலும் திரவத்தன்மை பெருமளவில் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக அதன்பின்னர் வீதங்களை வீழ்ச்சியடையச் செய்தன.

### திறைசேரி உண்டியல் சந்தை

#### முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

திரவத்தன்மை அதிகரித்ததைத் தொடர்ந்து திறைசேரி உண்டியல்களுக்கான கேள்வியுடனும், அதனோடிணைந்த விளைவு வீதங்களில் காணப்பட்ட குறைப்புடனும் இவ்வாண்டு ஆரம்பித்தது. ரூ. 16,000 இலட்சம் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்து மீளவழங்கப்படாமை, மத்திய வங்கியிலிருந்து அரசுக்கான தற்காலிக முற்பணங்களின் அதிகரிப்பு மற்றும் அரசிற்கான மத்திய வங்கி இலாப மாற்றல்கள் என்பன திரவத்தன்மையை அதிகரித்தன. மிகையான

## அட்டவணை 10.14

## பணச் சந்தைத் தொழிற்பாடுகள் 1993 - 1995


(ப. இ. ரூபாய்களில்)

| காலம் | | அழைப்புப் பணச் சந்தை | | | முதலாந்தரத் திறைசேரிச் சந்தை | | | | | இரண்டாந்தரத் திறைசேரிச் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஏற்றுக்கொள்ளப்பட்ட (கொள்வனவுகள்) தொகை | | | | | | |
| | | மொத்த கடன் வழங்கல்/ கடன்பாடு | கால முடிவில் வெளி நின்றவை (அ) | மொத்த வெளி நின்றவை | வழங்கப் பட்ட தொகை | மத்திய வங்கி | வர்த்தக வங்கிகள் | ஏனையவை | மொத்தம் | மொத்த விற்பனை | மொத்தக் கொள்வனவு | கால முடிவில் வெளிநின்ற நிலை |
| 1993 | 1ஆம் காலாண்டு | 78,122 | 1,059 | 88,096 | 35,632 | 11,120 | 13,749 | 10,763 | 35,632 | 27,670 | 16,565 | 3,285 |
| | 2ஆம் காலாண்டு | 100,584 | 1,571 | 92,496 | 50,736 | 16,611 | 20,467 | 13,658 | 50,736 | 27,026 | 13,000 | 3,962 |
| | 3ஆம் காலாண்டு | 98,377 | 1,004 | 94,496 | 42,029 | 14,076 | 12,897 | 15,056 | 42,029 | 27,377 | 8,150 | 5,742 |
| | 4ஆம் காலாண்டு | 97,907 | 1,192 | 97,196 | 30,459 | 6,394 | 17,622 | 6,443 | 30,459 | 12,690 | 9,136 | 2,777 |
| 1994 | 1ஆம் காலாண்டு | 126,036 | 1,125 | 97,996 | 29,302 | 3,601 | 13,550 | 12,151 | 29,302 | 6,948 | 2,506 | 1,560 |
| | 2ஆம் காலாண்டு | 88,612 | 2,144 | 98,096 | 36,152 | 4,147 | 22,885 | 9,119 | 36,152 | 5,546 | 5,792 | 2,688 |
| | 3ஆம் காலாண்டு | 114,341 | 1,811 | 95,396 | 45,660 | 4,475 | 29,702 | 11,483 | 45,660 | 5,485 | 2,070 | 2,939 |
| | 4ஆம் காலாண்டு | 139,475 | 1,242 | 98,896 | 57,255 | 7,881 | 35,812 | 13,562 | 57,255 | 3,208 | 9,097 | 1,415 |
| 1995 | 1ஆம் காலாண்டு | 121,859 | 3,308 | 98,546 | 57,166 | 1,028 | 36,946 | 19,192 | 57,166 | 5,867 | 2,977 | 3,683 |
| | 2ஆம் காலாண்டு | 145,655 | 2,301 | 100,396 | 56,577 | 4,770 | 35,085 | 16,723 | 56,577 | 3,534 | 6,542 | 2,822 |
| | 3ஆம் காலாண்டு | 166,686 | 2,942 | 107,671 | 55,445 | 5,882 | 33,507 | 16,057 | 55,445 | 2,696 | 12,358 | 1,914 |
| | 4ஆம் காலாண்டு | 219,416 | 8,078 | 113,771 | 54,823 | 8,237 | 31,425 | 15,161 | 54,823 | 4,947 | 13,451 | 1,728 |

(அ) ஒவ்வொரு காலாண்டிலும் இறுதிக் கிழமையில் வெளி நிற்கும் தொகை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

திரவத்தன்மையை ஈர்ப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்கள் மற்றும் தொடர்ச்சியான திறந்த சந்தை நடவடிக்கைகள் என்பனவற்றின் மத்தியிலும் முதலாந்தர ஏலங்கள் மிகை உதவுதொகைகளைக் கொண்டிருந்ததுடன் 1995 இன் முதற்காலாண்டில் விளைவு வீதங்களும் வீழ்ச்சியடைந்தன. மாச்சில் இறுதி முதலாந்தர ஏலத்தில் 3 மாத உண்டியல்கள் 1994 இன் இறுதி ஏலத்தில் காணப்பட்ட 18.73 சதவீத விளைவுடன் ஒப்பிடுகையில் 14.03 சதவீத சராசரி நிறையேற்றப்பட்ட விளைவைக் கொண்டிருந்தது. இதற்கு நேரிணையாக 12 மாத விளைவுவீதம் 19.43 சதவீதத்திலிருந்து 14.61 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் அதன் பின்னர் குறைவடைந்த திரவத்தன்மை, அரசு பெருமளவில் கொடுகடனை நாடியமை என்பனவற்றின் காரணமாக விளைவு வீதம் உயர்வடைந்தது. அத்துடன் கடைசி இரண்டு ஏலங்களிலும் பொதுமக்களின் உதவு தொகைகள் குறைவாகவே காணப்பட்டன. இவ் ஏலங்களில் விளைவு வீதங்கள் 3 மாத உண்டியல்களின் மீது 19.26 சதவீதமாகவும் 12 மாத உண்டியல்களின்மீது 18.97 சதவீதமாகவும் இருந்தன. எனினும் நவெம்பர் நடுப்பகுதியிலிருந்து 3 மாத வீதங்கள் 12 மாத வீதங்களை விஞ்சியமையின் காரணமாக ஏலக்கோரல்கள், விளைவு வளைகோட்டினை தலைகீழாக மாற்றிவிட்டமையானது எதிர்காலத்தில் வட்டிவீதங்கள் வீழ்ச்சியடையலாம் என்ற சந்தைத் தோற்றப்பாட்டினை எடுத்துக்காட்டியது. ஆண்டு முழுவதையும் முழுமையாக நோக்குகையில், 1995 இல் ரூ. 164,750 இலட்சம் பெறுமதியான புதிய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்ட வேளையில் ரூ. 16,000 இலட்சம் பெறுமதி கொண்ட உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தன. இப்புதிய வழங்கலில் ரூ. 43,500 இலட்சம் சிறப்பு வெளியீடுகளாக இருந்ததுடன் மத்திய வங்கியினால் நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டன.




### மத்திய வங்கி இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

ஆண்டின் தொடக்கப் பகுதியில் மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக் கொள்வதற்காகவும் பின்னரைப்பகுதியில் திரவத்தன்மையை அதிகரித்துக் கொள்வதற்காகவும் மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையைத் தொடர்ந்தும் பயன்படுத்தியது. இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கி விற்பனைகள் (கழிவு வழங்கல்) 1994 இன் ரூ.

## அட்டவணை 10.15

### பங்குச்சந்தைக் குறிகாட்டிகள் 1992 - 1995

| | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|
| 1. சந்தை மூலதனவாக்கம் (ப.இ.ரூ.) திசெம்பர் 31 இல் | 66,200 | 123,790 | 143,210 | 106,869 |
| 2. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை (எண்) | 15 | 12 | 15 | 14 |
| 3. வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை (ப.இ.) | 78 | 49.05 | 146 | 72 |
| 4. வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) | 1,267 | 1,246.8 | 3,248 | 1,814 |
| 5. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 88 | 351 | 506 | 320 |
| 6. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) | 4,969 | 18,579 | 34,522 | 11,249 |
| 7. விலைக் குறிகாட்டிகள் - கொ.ப.ப. இன் முழுவதும் திசெ.முடிவில் உள்ளவாறு | 605.31 | 978.97 | 986.73 | 663.70 |
| கொ.ப.ப. வின் உணர்விலைச் சுட்டெண் (திசெ.முடிவில் உள்ளவாறு) | 826.57 | 1,442.44 | 1,438.82 | 990.50 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

## அட்டவணை 10.16

### முதலீட்டு வகை அடிப்படையில் புதியபங்கு வழங்கல்களின் எண்ணிக்கை 1992 - 1995

| முதலீட்டு வகை | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்புறுதி | 1 | 3 | 6 | 2 |
| குளிர்பானங்கள், உணவு, புகையிலை | 2 | – | 3 | – |
| இரசாயனமும், மருந்தாக்கல்களும் | – | – | – | – |
| கட்டடவாக்கமும் பொறியியலும் | – | – | – | – |
| காலணிகளும், புடவைகளும் | 1 | – | 1 | – |
| உணவகங்களும், பயணங்களும் | 4 | 4 | – | 1 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | – | – | – | – |
| காணியும் சொத்தும் | – | – | – | 1 |
| தயாரிப்பு | – | 2 | 4 | 5 |
| உந்திகள் | 3 | 1 | – | – |
| ஒயில் பாம் | – | – | – | – |
| பயிர்ச் செய்கை | – | – | – | 6 |
| பணிகள் | 1 | – | – | – |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | – | – | – | – |
| வர்த்தகம் | 3 | 2 | – | – |
| மொத்தம் | 12 | 12 | 15 | 14 |
| கோரப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 78 | 42 | 146 | 72 |
| கோரப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ.) | 1,267 | 1,050 | 32 | 1,814 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

21.2 பில்லியன் பெறுமதி கொண்ட விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் 1995 அல் ரூ. 17 பில்லியனாக விளங்கிய வேளையில் கொள்வனவுகள் (மீள்கழிவிடல்) 1994 இன் ரூ. 19.5 பில்லியன் கொண்ட கொள்வனவுகளுடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூ. 35.3 பில்லியனாக விளங்கின. ஆகவே தேறிய அடிப்படையில், மத்திய வங்கி அதன் இரண்டாந்தர சந்தைத் தொழிற்பாடுகளூடாக திரவத்தன்மையை ரூ. 18.3 பில்லியன் தொகைக்கு அதிகரித்துக் கொண்டது. மத்திய வங்கியின் கழிவு மற்றும் மீள்கழிவு வீதங்கள் தொடர்ந்தும் முதலாந்தர சந்தையிலுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகளுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 1995 இன் தொடக்கதில் 4.75 சதவீதப் புள்ளிகளாக இருந்த இவ்வீதங்களுக்கிடையிலான வீச்சு பெப்புருவரியில் 4.25 சதவீதப் புள்ளிகளுக்கு குறைக்கப்பட்டு மாச்சு இறுதியில் தொடக்க மட்டத்திற்கு அதிகரிக்கப்பட்டு ஏப்பிறலில் 4.75 சதவீதப் புள்ளிகளுக்கு மேலும் அதிகரிக்கப்பட்டது. சந்தையில் திரவத்தன்மை குறைக்கப்படடதனைக் கருத்திற்கொண்டு ஓகத்தில் வீச்சு மீண்டும் 4.5 சதவீதப் புள்ளிகளுக்கு குறைக்கப்பட்டது. வங்கிகளுக்கு நியாயமான வீதங்களில் திரவத்தன்மை கிடைப்பதனை இயலச் செய்யும் பொருட்டு நவம்பரிலிருந்து வீச்சு மேலும் ஒருபடி குறைக்கப்பட்டதுடன் 1995 இறுதியில் 1.46 சதவீதப்புள்ளிகளில் நிலை கொண்டது.

## திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கி மீள் கொள்வனவுச் சந்தை

அழைப்புச் சந்தையை உறுதிப்படுத்தும் பொருட்டு 1995 இல் மீள் கொள்வனவு உடன்படிக்கைகளுடன் மத்திய வங்கி அதன் திறைசேரி உண்டியல் விற்பனைகளை மேலும் பயன்படுத்திக்கொண்டது. இச்செயல்முறையின் மூலமான தன்னிடம் திறைசேரி உண்டியல் பட்டியல் ஒன்று காணப்படும் வரை வங்கிக்கு அழைப்புச் சந்தை வீதங்கள் மிக்க குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியுறுவதனைத் தடுக்கக்கூடியதாக இருந்தது. எனினும் ஆண்டின் தொடக்கத்தில் திறைசேரி உண்டியல் உடைமைகள் குறைவடைந்தமையில் காரணமாக அதனது இத்தகைய முயற்சிகள் சிலவேளைகளில் பாதிக்கப்பட்டன.

1995 இல் மத்திய வங்கியின் மீள் கொள்வனவு விற்பனைகள் 1994 இன் ரூ. 230.9 பில்லியன் விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் ரூ. 198 பில்லியனாக விளங்கியது. மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் ஒருநாளிலிருந்து (இரவுமுழுவதும்) 91 நாட்கள் வரையிலான காலப் பகுதியைக் கொண்டிருக்கலாம். எனினும் நடைமுறையில் மீள் கொள்வனவுகள் வழமையாக ஒரு வாரத்துக்கு குறைவானவையாகவும் பெருந்தொகையான மீள் கொள்வனவுகள் ஓர் இரவைக் கொண்டனவாகவும் இருந்தன. ஓரிரவுக்கான மீள் கொள்வனவு வீதம் சந்தை அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டு நாளாந்தம் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றது.

1994 இறுதியில் மீள் கொள்வனவு வீதம் 20.00 சதவீதமாக இருந்தது. இது மாச்சின் நடுப்பகுதியில் சந்தையின் திரவ நிலைமை மற்றும் ஏனைய வட்டி வீதங்களுடன் இணைந்து செல்லத்தக்கதாக 12 சதவீதத்திற்குப் படிப்படியாக குறைக்கப்பட்டது. அதன் பின்னர் இது ஏனைய வட்டி வீதங்களுடன் இணைந்து செல்லத் தக்கதாக சில தளம்பல்களுடன் அதிகரிக்கப்பட்டு 1995 இறுதியில் 16.50 சதவீதமாக விளங்கியது.

## திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கி நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தை

மத்திய வங்கியினால் மீள் கொள்வனவு வசதி ஆரம்பிக்கப்பட்டமையானது அழைப்புச் சந்தையின் ஆகக்குறைந்த எல்லையினை உறுதிப்படுத்த உதவியது. எனினும் சந்தையின் உயர்ந்த எல்லையினை உறுதிப்படுத்துவதற்கு இதைப்போன்றதொரு செயல்முறை காணப்படாததன் காரணமாக அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 1995 இல் மிக உயர்ந்த மட்டங்களுக்கு உயர்வடைந்தன. வட்டிவீத வீச்சின் மேல் எல்லையில் ஓரளவு உறுதிப்பாட்டினை உருவாக்கும் பொருட்டு, 1995 நவெம்பரில் மத்திய வங்கியால் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. இது திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்டமுதன்மை வணிகர்களாகவுள்ள வர்த்தக வங்கிகள் தற்காலிக திரவத்தன்மைப் பெறுவதனை இயலச்செய்யும். இவ்வசதிகள் ஓரிரவு உடன்படிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் மத்திய வங்கி அது சந்தைக்கு வழங்க விரும்புகின்ற நிதியின் அளவினை அறிவித்து கோரல்களின் அடிப்படையில் வீதங்கள் தீர்மானிக்கப்பட இடமளித்தது. இதன் பின்னர், மத்திய வங்கியின் நாணய முகாமைத்துவத்தில் அதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நெகிழ்ச்சித்தன்மையை அதிகரிக்கும் பொருட்டு வழங்கப்பட்ட முழுத் தொகையையும் அறிவிக்காமல் வங்கி கோரல்களைக் கோரியது. 1995 நவம்பர் 10

இலிருந்து திசெம்பர் 11 ஆம் நாள்வரை நாளொன்றுக்கு வழங்கப்பட்ட திரவத்தன்மையின் சராசரி அளவு ரூ. 4,950 இலட்சமாகவும் ஆகக்கூடிய தொகை ரூ. 14,500 இலட்சமாகவும் காணப்பட்டது. பெறப்பட்ட கோரல்கள் 18.00 – 50.00 சதவீத வீச்சில் இருந்தவேளையில் நிறையேற்றப்பட்ட சராசரி 22.50 இற்கும் 50.00 இற்குமிடையான வீச்சினைக் கொண்டிருந்தன. மீள் கொள்வனவு வசதியானது அழைப்புச் சந்தை வீதங்களை ஓரளவுக்குக் குறைத்த போதும், முன்னர் குறிப்பிட்டதுபோன்று வட்டிவீச்சின் மேல் எல்லையைக் கட்டுப்படுத்துவதில் இது முழுமையான வெற்றி காணவில்லை. திசெம்பர் 11 ஆம் நாளின் பின்னர் சந்தையில் திரவ நிலைமை அதிகரித்தமையின் காரணமாக நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகளினூடாக இருதடைவகள் மட்டுமே வங்கி சந்தையில் தலையிட்டது.

### உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

இடையீட்டு நாணயமாக ஐ. அ. டொலரினை மத்திய வங்கி பேணியதுடன் டொலருக்கான நாளாந்த கொள்வனவு விற்பனவு வீதங்களை வங்கி தொடர்ந்தும் அறிவித்தது. ஆண்டின் முற்பகுதியில் கொள்வனவு விற்பனவு வீதங்களுக்கிடையிலான இடைவெளி 1 சதவீதமாகக் பேணப்பட்டது. செலாவணி வீதங்கள் பெருமளவிற்கு சந்தையினால் தீர்மானிக்கப்படுவதற்கு அனுமதிக்கும் கொள்கைகளைப் பின்பற்றுமுகமாக வர்த்தக வங்கிகள் கொடுக்கல் வாங்கல்கல்களுக்கான தமது வீதங்களைத் தீர்மானிப்பதற்கு பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையை வழங்கும் பொருட்டு இவ்விடைவெளி 1995 மாச்சு 20 ஆம் நாளிலிருந்து 2 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. வெளிநாட்டு நிதியங்கள் நாட்டிற்குக் குறைவான உட்பாய்ந்தமையின் விளைவாக, மத்திய வங்கியின் டொலர்க் கொள்வனவுகள் 1994 இன் ஐ.அ. டொலர் 6,520 இலட்சத்திலிருந்து 1995 இல் ஐ.அ. டொலர் 2,020 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1995 இல் மத்தியவங்கி, வர்த்தக வங்கிகளுக்கு ஐ.அ. டொலர் எதனையும் விற்பனை செய்யவில்லை. 1994 இல் அத்தகைய விற்பனைகள் ஐ. அ. டொலர்கள் 720 இலட்சமாக விளங்கின.

### கரைகடந்த சந்தை

1994 இன் 15 சதவீத அதிகரிப்பினைத் தொடர்ந்து 1995 இன் முதல் பதினொரு மாதங்களில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 8.9 சதவீதமான உயர்வினைக் கொண்டிருந்தன. மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1994 இறுதியின் ஐ. அ. டொலர் 13,040 இலட்சத்திலிருந்து 1995 நவெம்பர் இறுதியில் ஐ. அ. டொலர் 14,210 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. 1994 இன் 10.6 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக பொறுப்புக்கள் பக்கத்தில் குறைந்த வீத வளர்ச்சிக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த (ஐ. அ. டொலர் 6,650 இலட்சத்திலிருந்து ஐ. அ. டொலர் 5,980 இலட்சம்) வதிவற்றோர் வைப்புக்களில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாகும். பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டினைப் பாதித்த காரணிகள் வெ. நா. வ. பிரிவுகளின் வெளிநாட்டு வைப்புக்களிலும் அதே போன்றதான பாதிப்பினை ஏற்படுத்தின.

எனினும் வதிவோரின் வைப்புக்கள் 1994 இறுதியின் ஐ. அ. டொலர் 5,370 இலட்சத்திலிருந்து 1995 நவெம்பர் இறுதியில் ஐ. அ. டொலர் 6,610 இலட்சத்திற்கு, 1994 இன் 22 சதவீதத்திற்கெதிராக 23 சதவீதத்தினால் அதிகரித்தது. சொத்துக்கள் பக்கத்தில், வதிவற்றோருக்கான கடன்களும் முற்பணங்களும் 1994 இன் 18.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்து ஐ. அ. டொலர் 5,400 இலட்சத்திலிருந்து ஐ. அ. டொலர் 5,540 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. எனினும் வதிவோர்வகைக்கான கடன்களும் முற்பணங்களும் ஐ. அ. டொலர் 7,250 இலட்சத்திலிருந்து ஐ. அ. டொலர் 8,060 இலட்சத்திற்கு 11.2 சதவீதத்தினால் (1994 இல் அதிகரிப்பு 14.6 சதவீதமாக இருந்தது) வதிவோர்களின் கடன்களுக்குப் பிரயோகிக்கப்பட்ட உயர்வட்டிவீதங்கள் முதலீட்டில் பெயர்ச்சி ஏற்படத் தூண்டுதலாக விளங்கின. முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளுக்கான கடன்கள் ஐ.அ. டொலர் 4,590 இலட்சத்திலிருந்து ஐ. அ. டொலர் 5,320 இலட்சத்திற்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வதிவோருக்கான கடன்கள் ஐ.அ. டொலர் 1,860 இலட்சத்திலிருந்து ஐ. அ. டொலர் 1,530 இலட்சத்திற்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

முழுமையாக உதவப்பட்ட பன்னாட்டு மூலதன சந்தையில் இலங்கை வங்கி ஐ.அ. டொலர் 120 இலட்சம் பெறுமதிகொண்ட மிதக்கவிடும் வீதத் தாள்களை வழங்கியது. அதன் மூலம் பெறப்படும் நிதியம் அவர்களின் வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளின் செலுத்துப் பட்டியலிலுள்ள முதிர்ச்சியின் பொருத்தமான தன்மையினைக் குறைக்கப் பயன்படுத்தப்படும்

## அட்டவணை 10.17
## 1995 இல் கூட்டு நிலையங்களின் புதிய பங்கு வழங்கல்கள்

| | கூட்டு நிலையங்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை (ஆயிரம் | முகப்புப் பெறுமதி (ரூபா) | கட்டணம் (ரூபா) | பங்குகளின் பெறுமதி (ரூ. ப. இ.) | பொதுமக்களால் விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | உதவுநர்களால் பொறுப்பேற்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | எலஸ்றோமெட்றிக் என்ஜினியரிங் | 2,500 | 10 | 40 | 125 | 3,231 | - |
| 2. | வரையறுக்கப்பட்ட ஏசிஎல் பிளாஸ்ரிக் | 1,400 | 10 | 30 | 56 | 830 | 570 |
| 3. | வரையறுக்கப்பட்ட மெற்றல் றெசிகிளோர்ஸ் கொழும்பு | 3,033 | 10 | 35 | 137 | 400 | 2,633 |
| 4. | வரையறுக்கப்பட்ட பிறின்ற் கெயர் (சிலோன்) | 4,000 | 10 | 35 | 180 | 205 | 3,795 |
| 5. | வரையறுக்கப்பட்ட மெற்றலிக்ஸ் என்ஜினியரிங் கோ | 1,000 | 10 | 45 | 55 | 29 | 971 |
| 6. | வரையறுக்கப்பட்ட லங்கா வென்ஜர் | 14,488 | 10 | 10 | 290 | 6,745 | 7,743 |
| 7. | வரையறுக்கப்பட்ட கொனய்சன்ஸ் டீ சிலோன் | 8,300 | 10 | 30 | 332 | 34 | 8,266 |
| 8. | வரையறுக்கப்பட்ட கப்பிட்டல் டெவலப் மென்ற் அன்ட் இன்வெஸ்மன்ட்ட | 10,000 | 10 | 30 | 400 | 280 | 9,720 |
| 9. | வரையறுக்கப்பட்ட பொகவந்தலாவ பிளான்டேசன் | 4,000 | 10 | - | 40 | 446 | 3,554 |
| 10. | வரையறுக்கப்பட்ட கொட்டகல பினான்டேசன் | 4,000 | 10 | - | 40 | 206 | 3,794 |
| 11. | வரையறுக்கப்பட்ட அகலவத்தை பினான்டேசன் | 4,000 | 10 | - | 40 | 37 | 3,963 |
| 12. | வரையறுக்கப்பட்ட கேகாலை பினான்டேசன் | 4,000 | 10 | - | 40 | 767 | 3,233 |
| 13. | வரையறுக்கப்பட்ட கொறன பினான்டேசன் | 4,000 | 10 | - | 40 | 68 | வி.கி |
| 14. | வரையறுக்கப்பட்ட களனிவெலி பிளான்டேசன் | 4,000 | 10 | - | 40 | 796 | 3,204 |

மூலம் : கொழும்பு பங்குச் சந்தை

குறிப்பு :

1. புதிய பங்கு வழங்கல்கள் பொதுமக்களுக்கு உதவுவதற்காக பொதுமக்களின் வழங்கலுக்காகத் திறக்கப்பட்ட திகதிகளின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டது.
2. 1995 இல் வரையறுக்கப்பட்ட வட்டவளை பிளான்டேசன், வரையறுக்கப்பட்ட மஸ்கெலியா பிளான்டேசன் கோ. மற்றும் வரையறுக்கப்பட்ட மடுல்சீம பினான்டேசன் கோ. ஆகிய மூன்று பெருந் தோட்டக் கம்பனிகளினதும் பங்கு மூலதனத்தில் 51 சதவீதம் எல்லாம் 'அல்லது ஒன்றுமில்லை என்ற அடிப்படையில் அரசினால் விற்பனைக்கு விடப்பட்டது. இம்மூன்று வழங்கல்களினதும் பெறுமதி ரூ. 3,060 இலட்சமாக (306 இலட்சம் பங்குகள்) விளங்கியது.
3. வி.கி. - விபரம் கிடைக்கவில்லை.

## 10.12 மூலதனச் சந்தை

1995 இல் கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைகள் பொதுவாக மந்தநிலை மற்றும் கரடிப்போக்குபோன்ற பண்புகளைக் கொண்டிருந்தன. உள்நாட்டு முதலீட்டாளர்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் பாரிய முதலீடுகளை மேற்கொள்வதிலிருந்து தம்மைத் தவிர்த்துக்கொண்டனர். சந்தையில் 1994 இன் பிற்பகுதியில் ஆரம்பித்த வீழ்ச்சியானது தொழிலாளர் அமைதியின்மையினாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டமையினாலும் 1995இன் முற்பகுதியில் மேலும் மோசமாக்கப்பட்டது. பங்கு விலைகளில் யூன் மாதத்திலும் யூலை மாதத்திலும் சிறிய அதிகரிப்பு ஒன்று காணப்பட்ட போதிலும் தொடர்ந்து வீழ்ச்சியையே காட்டியது. இவ்வாண்டில் அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 33 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில் உணர்விலைச் சுட்டெண் 31 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பங்குச் சந்தையில் விரைவான வளர்ச்சிக்குப் பொதுவாகப் பங்களிப்புச் செய்யும் வெளிநாட்டுப் பங்கேற்பு மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இலங்கையரல்லாதோர் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களிலும் தேறிய விற்பனையாளர்களாக விளங்கி, அதன்பின்பு குறிப்பிடத்தக்களவில் தேறிய கொள்வனவாளர் களாக மாறுவதுடன் கொழும்பு பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை மீண்டும் நிலை நிறுத்தப்பட்டுள்ளமைக்கான அறிகுறிகள் காணப்பட்டன. எவ்வாறாயினும் திசெம்பரில் மீண்டுமொருமுறை அதற்கு எதிர்மாறான நிலைமை உருவாகியதுடன் முழுமையாகப் பார்க்கையில் அவ்வாண்டில் இலங்கையரல்லாதோர் தேறிய விற்பனையாளர் களாகவே காணப்பட்டனர். சந்தையில் காணப்பட்ட ஆரம்ப வழங்கல்கள் வெற்றிகரமாக அமையாததுடன் 1995 இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய பொது வழங்கல்கள் பதின்மூன்றில் ஒன்றிற்கு

மட்டுமே பொதுமக்களின் முழுமையான உதவி தொகையினைக் கொண்டிருந்தது. ஆறு பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்குகளையும் சந்தைக்கு விற்பனைக்கு வழங்கியதன் மூலம் தனியார்மயமாக்கலுக்கான தனது ஈடுபாட்டினை அரசு வெளிப்படுத்தியது.

## முதலாந்தரச் சந்தை

1995 இல் உதவுதொகைக்கான வழங்கப்பட்ட புதிய முதலாந்தர தொடக்க வழங்கல்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டமைக்கு தனியார் மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏழு வழங்கல்கள் ஓரளவு காரணமாக அமைந்தன. எனினும் உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை கடுமையாக வீழ்ச்சியடைந்ததுடன் மூலதனச் சந்தையில் பெறப்பட்ட மொத்த நிதியங்கள் 1994 இன் ரூ. 108,750 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 25,740 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1995 இல் பொதுமக்களின் உதவுதொகைக்காக ஆரம்பிக்கப்பட்ட 13 தொடக்க வழங்கல்களும் ஆரம்பப் பொது வழங்கல்களாக (ஆபொவ) இருந்தன. இவற்றில் ஆறு பெருந்தோட்டக் கம்பனிகளாகக் காணப்பட்டதுடன் அரசினர் தனியார் மயமாக்கல் திட்டத்தின் பாகமொன்றாக இவை விற்பனைக்கு விடப்பட்டன. 1994 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 15 புதிய வழங்கல்கள் உதவுதொகைக்காக தொடங்கப்பட்டன. அத்துடன் அரசும் ஏனைய மூன்று பெருந்தோட்ட முகாமைக் கம்பனிகளின் பங்குகளில் 51 சதவீதத் தொகுதியினை முற்றாக வாங்குவதற்கு அல்லது ஒன்றையும் வாங்காது விடுவதற்கு என்ற அடிப்படையில் விற்பனைக்காக வழங்கியது. இவை தற்போதைய முகாமைக் கம்பனிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டன. புதிய தொடக்க வழங்கல்கள் பதினான்கில், பதின்மூன்று வழங்கல்களுக்கு முழுமையாக உதவுதொகைகள் பெறப்படவில்லை. இவ்வழங்கல்களுக்கான உத்தரவாத்தை வழங்கியோர் வழங்கப்பட்ட மொத்தப்பங்குகளில் 80 சதவீதத்திற்கு மேலாக ஏறக்குறைய ரூ. 10,670 இலட்சம் பெறுமதியில் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. பெருந்தோட்டக் கம்பனிகளில் பொது முதலீடானது வழங்கப்பட்ட உதவுதொகையின் சராசரி 10 சதவீதத்தை மட்டுமே கொண்டிருந்தது. பதின்மூன்று கம்பனிகளின் மொத்த சந்தைப் பெறுமதி (பங்குமிகைக்கட்டணம் உட்பட) ரூ. 14,080 இலட்சமாகக் காணப்பட்டது. 1994 இல் மொத்தச் சந்தைப்பெறுமதி ரூ. 30,750 இலட்சமாகக் காணப்பட்டது.

கம்பனிகளின் உரிமை வழங்கல்கள் வாயிலாகப் பெறப்பட்ட நிதியங்களிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டது. 1994இல் 29 உரிமை வழங்கல்களின் மூலமாகப் பெறப்பட்ட ரூ. 78,000 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் 15 உரிமை வழங்கல்கள் மூலமாக ரூ. 11,660 இலட்சம் மட்டுமே பெறப்பட்டது.

அட்டவணை 10.18

**1995 இல் இரண்டாந்தர பங்குச்சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்**

| முதலீடுகளின் வகை | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| வங்கிகள், நிதி, காப்புறுதி | 78,235 | 136,520 | 5,305,1 |
| குடிபானங்கள், உணவு, புகையிலை | 16,906 | 48,811 | 568,2 |
| கட்டடவாக்கமும், பொறியியலும் | 3,155 | 6,448 | 110,6 |
| இரசாயனமும், மருந்தகங்களும் | 1,828 | 3,236 | 229,7 |
| பன்முகப்படுத்தப்பட்ட | – | – | – |
| காலணிகளும், புடவைகளும் | 8,958 | 13,106 | 225,1 |
| உணவகங்களும் பயணங்களும் | 10,657 | 23,019 | 448,8 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | 3,348 | 4,861 | 772,8 |
| காணியும் சொத்தும் | 12,177 | 14,826 | 186,3 |
| தயாரிப்பு | 41,534 | 50,689 | 1,792,9 |
| உந்திகள் | 2,553 | 3,966 | 179,1 |
| ஒயில் பாம் | 34 | 45 | 14,7 |
| பெருந்தோட்டப்பயிர் செய்கை | 1 | – | – |
| பணிகள் | 1,814 | 4,676 | 683,2 |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | 171 | 176 | 19,4 |
| வர்த்தகம் | 4,904 | 5,545 | 681,7 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

## இரண்டாந்தரச் சந்தை

1994 இல் ஆரம்பித்த போக்கினைத் தொடர்ந்து பங்கு விலைச் சுட்டெண்கள், சந்தைத்திருத்தம் உயர்வட்டிவீதங்கள் வெளிநாட்டவர்கள் குறைந்தளவில் பங்குபற்றியமை ஆகியவற்றின் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நடைமுறை ஆண்டிலும் வீழ்ச்சியடைந்தன. 1994 திசெம்பரிலிருந்து 1995 மே இறுதியில் அனைத்து பங்குவிலைச் சுட்டெண்ணும் (அபவிசு) 986.7 இலிருந்து 693.0க்கு வீழ்ச்சியடைந்தேவளையில் (30 சதவீதக்குறைப்பு) உணர்விலைச் சுட்டெண் (உவிசு) 1,438.8 இலிருந்து 908.4க்கு (31 சதவீதக்குறைப்பு) வீழ்ச்சியடைந்தது. பங்கு விலைகள் யூனிலும் யூலையிலும் சிறிதளவால் அதிகரித்ததெனினும் அதன் பின்னர் மீண்டுமொருமுறை வீழ்ச்சியடைந்தன. 1995 இன் இறுதியில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 663.7க்கு வீழ்ச்சியடைந்தவேளையில் (இவ்வாண்டில் 33 சதவீத வீழ்ச்சி) உணர்விலைச்சுட்டெண் 990.5 க்கு (இவ்வாண்டில் 31 சதவீத வீழ்ச்சி) வீழ்ச்சியடைந்தது. பங்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சந்தை மூலதனவாக்கம் 1994 இறுதியின் ரூ. 143.2 பில்லியனிலிருந்து 1995 இறுதியில் ரூ. 106.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

சந்தையில் நடவடிக்கை மட்டமும் மிகவும் தாழ்ந்து காணப்பட்டது. நாளாந்தப் புரழ்வு 1994 இன் சராசரி ரூ. 1,480 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 470 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் (68 சதவீதங்கொண்ட வீழ்ச்சி) கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை 5,060 இலட்சத்திலிருந்து 3,200 இலட்சத்துக்கு (37 சதவீத வீழ்ச்சி) வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு முதலீட்டாளர்களின் முதலீட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி வெளிநாட்டு முதலீட்டாளர்களினது வீழ்ச்சியைவிட மிகவும் குறிப்பிடக் கூடியதாயிருந்தது. 1994 இல் புரழ்வின் 60 சதவீதத்துக்கு வகைகூறிய உள்நாட்டு முதலீட்டாளர்கள் தமது நடவடிக்கைகளை 78 சதவீதத்தால் குறைத்ததுடன் 1995 இல் புரழ்வின் 41 சதவீதத்துக்கு மட்டுமே வகைகூறினர். வெளிநாட்டவரின் புரழ்வு 52 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டவரின் கொள்வனவுகள் 1994 இன் ரூ. 144,730 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 53,890 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் விற்பனைகள் ரூ. 131,390 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 54,790 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டினை முழுமையாக நோக்குகையில், வெளிநாட்டவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளிலும் பெருமளவில் தேறிய கொள்வனவாளர்களாக விளங்கியமைக்கு மாறாக ரூ. 900 இலட்ச அளவுக்கு தேறிய விற்பனையாளர்களாக காணப்பட்டனர். கொழும்புப் பங்குச்சந்தையில் வெளிநாட்டு ஈடுபாடு குறைவாகக் காணப்பட்டமைக்கு 1994 இன் இறுதிப்பகுதியிலும் 1995 இன் முதற்பகுதியிலும் காணப்பட்ட தொழிலாளர் அமைதியின்மையும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டமையுமே காரணமாகும். அத்துடன் ஐ. அமெரிக்க நாடுகளின் உயர் வட்டி வீதங்கள் 1994 இன் மெச்சிக்கோ நெருக்கடி ஆகியவற்றைத் தொடர்ந்து புதிய சந்தைகளில் முதலீடுகளை மேற்கொள்ளுவதில் மேலைநாட்டு முதலீட்டாளர்கள் கவனமான போக்கினைக் கடைப்பிடித்தமையே முதலீடுகளை நன்கு நிறுவப்பட்ட நிதிச் சந்தைகளின் பக்கம் இட்டுச்சென்றன.

## கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள்

1994 இனைப் போன்றே 1995 இலும் நான்கு கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொழிற்பட்டன. பங்குச்சந்தையின் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், இந்நான்கு கூறு நம்பிக்கை பொறுப்புக்களினதும் இணைந்த தேறிய சொத்துக்களின் பெறுமதி 1994 இறுதியின் ரூ. 39,470 இலட்சத்திலிருந்து 1995 இல் ரூ. 28,890 இலட்சத்திற்கு குறைவடைந்தது. இது 26.8 சதவீதங்கொண்டதொரு வீழ்ச்சியாகும். மாறாக 1994 இல் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களின் தேறிய மொத்துப்பெறுமதி 10.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களினால் பங்குடைமைகளில் செய்யப்பட்ட சராசரி முதலீடு 1994 இல் அவர்களது தேறிய சொத்துப் பெறுமதியின் 64 சதவீதத்திலிருந்து 1995 இல் 61.4 சதவீதத்திற்கு வீழ்ச்சிடைந்தது. அவர்களது சொத்துப் பட்டியல்களின் அமைப்பில் ஏற்பட்ட இப்பொதுவான பெயர்ச்சி 1995 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 32.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் அவர்களது தேறிய சொத்துப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஒரு குழுவாக இணைந்து 26.8 சதவீதத்தில் கட்டுப்படுத்துவதற்கு ஓரளவு இயலச் செய்தது.

## 10.13. நிதித்துறை சீராக்கங்கள்

நிதிச்சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செயல்முறையின் ஒரு பகுதியாக 1995 இல் முக்கிய சட்டவாக்கத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் (கொதப) வங்கித்தொழில் சட்டம், தேசிய சேமிப்பு வங்கி சட்டம் நாணய விதிச் சட்டம் (நாவிச) பதியப்பட்ட பங்குகள் பிணைகள் கட்டளைச் சட்டம் (பபபிச) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்ளைச் சட்டம் (உதிஉச) ஆகிய எல்லாவற்றிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. குத்தகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வணிக வங்கிகள் கொடுகடன் தகவல் பணியகத்தில் வசதிகளைப் பெற்றுக்கொள்வதை அனுமதிப்பதற்காக கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்துக்கான திருத்தங்கள், வங்கியின் மூலதன அடித்தளத்தை மீளமைப்புச் செய்வதற்கும் அதன் தொழிற்பாடுகளை அதிகளவில் சந்தை சார்ந்ததாக அமைவதற்காகவும் திருத்தப்பட்டது. ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் அதன்மூலம் நிதித்துறையின் உறுதிப்பாட்டை பேணுவதற்குமாக தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி அரசஈட்டு முதலீட்டு வங்கி ஆகியவற்றை மத்திய வங்கியின் கிரமமான மேற்பார்வையின் கீழ் கொண்டுவருவதுடன் இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவு (வெநாவபி) களுக்குப் பொருத்தமான வழிகாட்டல்களை நெருக்கமான முறையில் மேற்பார்வை செய்வதற்கு மத்திய வங்கிக்கு இயலச்செய்யும் பொருட்டும் வங்கித்தொழில் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

இலங்கையில் சான்றிதழ் இல்லாத அரச பிணைகளின் வர்த்தக முறையொன்றின் நிறுவுதலை மேம்படுத்தும் பொருட்டும் நாணய விதிச்சட்டத்திற்கும் (நாவிச) பதிவு செய்யப்பட்ட பங்குகள், பிணைகள் சட்டத் (பபபிச) துக்கும் உள்ளூர் திறைசேரி உண்டியல் சட்டத்துக்குமான திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இவை முதலாந்தரச் சந்தையின் விரிவாக்கத்தினதும் அரச பிணைகளில் தொழிற்படும் இரண்டாந்தரச் சந்தையின் அபிவிருத்தியிலும் நன்மையளிக்கக் கூடியதாயிருக்கும். இத்திருத்தங்களூடாக புறக்குறிப்பிடுவதன்மூலம் மாற்றல் செய்யப்படக்கூடிய திறைசேரி உண்டியல்கள் போன்ற புதிய வடிவிலான பத்திரமற்ற அரச பிணைகளின் வழங்கலுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. திறைசேரி உத்தரவாதப் பத்திரம் போன்ற இவை ஓராண்டுக்கு மேற்பட்ட முதிர்ச்சியைக் கொண்டிருப்பதுடன் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படுவதற்கு மேலதிகமாக வட்டியின் நறுக்கு வீதத்தினையும் கொண்டிருக்கும்.